# இஸ்லாமிய உண்மை தாள்



# Islamic Fact Sheets

# Content Tamil Book

1. நபி (ஸல்) அவர்கள் ஒரு வாரிசாக நியமிக்கப்பட்டார்களா? ........ 2
2. நபி (ஸல்) அவர்களின் இந்த பன்னிரண்டு வாரிசுகள் யார்? ........ 8
3. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தை ஏன் பின்பற்ற வேண்டும்? ........ 14
4. ஏன் ஷியா? ........ 20
5. ஸஹீ அல் புஹாரியில் ஷியா அறிவிப்பாளர்கள் ........ 25
6. அனைத்து கூட்டாளிகளும் நம்பத்தகுந்தவர்கள், மற்றும் உண்மையாளர்கள் ........ 30
7. ஷியாக்கள் ஒரு வித்தியாசமான குர்ஆனை நம்புகிறார்களா? ........ 36
8. ஷியாக்கள் ஏன் தர்பாஹ் (களிமண்கட்டி) மீது நெற்றியை பதித்து ஸஜ்தா செய்கிறார்கள்? ........ 42
9. ஷியாக்கள், ஏன் Tarawih பிரார்த்தனைகளை தவிர்க்கிறார்கள்? சபைகள் தவிர்க்க ஏன் ........ 46
10. ஷியாக்கள் ஜெபங்களை ஏன் இணைக்கிறார்கள்? ........ 51
11. புள்ளிகள் இல்லாமல் ஒரு சொற்பொழிவு ........ 57

## 1. நபி (ஸல்) அவர்கள் ஒரு வாரிசாக நியமிக்கப்பட்டார்களா?

அல்லாஹ்வின் பெயரால்

தூதரே! உமது இறைவனிடமிருந்து உம்மீது இறக்கப்பட்டதை (மக்களுக்கு) எடுத்துக் கூறிவிடும்; இவ்வாறு நீ செய்யாவிட்டால், அவனுடைய தூதை நீர் நிறைவேற்றியவராக மாட்டீர். அல்லாஹ் உம்மை மனிதர்களின் தீங்கிலிருந்து காப்பாற்றுவான்; நிச்சயமாக அல்லாஹ் நிராகரிக்கும் கூட்டத்தாரை நேர்வழியில் செலுத்தமாட்டான். (குர்ஆன் அல் மாயிதா : 67)

### இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனக்குப் பின் வாரிசை ஏற்படுத்தினாரா?

இறைத்தூதர் அவர்கள் கஹதிர் குஹ்ம் நாளில் தனக்குப் பின் வாரிசாக அலி பின் அபிதாலிப் அவர்களை நியமித்த பிறகே அதிகாரப் பூர்வமாக அறிவிக்கச் சொன்ன குராஆனின் வசனம் நிறைவேறியதாக ஷியாக்கள் நம்புகிறார்கள்.

### கஹதிர் குஹ்ம் நாளில் நடந்தது என்ன?

கஹதிர் குஹ்ம் என்ற இடம் மக்காவிலிருந்து சில மைல்கள் தூரத்தில் மதினாவுக்கு செல்லும் பாதையில் உள்ளது. துல்ஹஜ் 18ம் நாளில் (10 மார்ச் 632) இறைத் தூதர் (ஸல்) அவர்கள் தனது புனித பயணத்தை (ஹஜ்) முடித்துக் கொண்டு திரும்பும்போது, இந்த இடத்தை கடந்துச் செல்ல வருகையில், குர்ஆனின் ஆயத்தாகிய "தூதரே! உமது இறைவனிடமிருந்து உமக்கு இறக்கப்பட்டதை எடுத்துக் கூறிவிடும்" (மக்களுக்கு) என்ற வசனம் இறங்கியது. தன்னுடன் புனித பயணம் செய்த மூ஁மின்கள் இந்த சாலை சந்திப்பில் தன்னைவிட்டு விலகி தங்களுடைய இடங்களுக்குச் சென்று விடுவார்கள் என்பதை உணர்ந்த இறைத்தூதர் (ஸல்) தனது பயணத்தை சற்று நிறுத்தினார். அவர்களுக்கு ஓர் அறிவிப்பு செய்ய வேண்டும் என்று கருதி மரக்கிளைகளைக் கொண்டு ஒரு மேடை அமைக்கக் கட்டளையிட்டார். மதியம் தொழுகைக்குப் பிறகு, தனது கட்டளைக்கு இணங்க அமைக்கப்பட்ட மேடையில், தனக்கு முன்னால் கூடியிருந்த பெருந்திரளான மக்கள் கூட்டத்திற்கு உரை நிகழ்தினார். இந்நிகழ்வு இறைத்தூதரின் (ஸல்) மறைவுக்கு மூன்று மாதத்திற்கு முன்பு நடந்தது.

இந்த உரையின் சிறப்பம்சம் என்னவென்றால், இறைத்தூதர் (ஸல்) தனது கைய்யால் இமாம் அலி கைய்யை பிடித்துக் கொண்டு இவர் அதிகாரத்திற்கு சிறந்தவராக இருக்கிறாரா? மூஃமின்களே என்று கூறியபொழுது, "அல்லாஹ்வின் தூதரே ! நீங்கள் சொல்வது சரியே " என்று கூடியிருந்த மக்கள் பெருஞ் சத்தமாய் கூறினார்கள்.

இறைத்தூதர் (ஸல்) அறிவித்தார். " இவர் யார்? நான் இவருக்கு தலைவராக (மௌலா) இருக்கிறேன், அலியும் தலைவர்தான் (மௌலா) " இறைவா, இவரை யார் நேசிக்கிறார்களோ அவர்களை நீயும் நேசிக்கிறாவனாய் இரு, இவரை யார் விரோதிக்கிறார்களோ, அவர்களை நீயும் விரோதிக்கிறாவனாக இரு, என்று கூறினார்.

இறைத்தூதர் (ஸல்) தனது உரையை முடித்தப் பின் கீழ்கண்ட வசனம் இறக்கப்பட்டது.

இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கிவிட்டேன். மேலும், உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கிவிட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாமை மார்க்கமாக பொருத்திக் கொண்டேன். **குர்ஆன் அல்மாயிதா (5:3)**

இறைத்தூதரின் (ஸல்) இந்த உரைக்குப் பிறகு இறைத்தூதர் (ஸல்) அவர்கள், அலிக்கு வாழ்த்துத் தெரிவித்து, அவரிடம் உறுதிமொழி கூறுங்கள் என்று ஒவ்வொருவரையும் கேட்டுக் கொண்டார்கள். இந்த உறுதிமொழி எடுத்தவர்களின் மத்தியில் உமர் பின் அல் கத்தாப் அவர்கள் " நல்லது நடந்தது இப்னு அபிதாலிப் அவர்களே, இன்றைக்கு நம்பிக்கைக் கொண்ட மூஃமினான ஆணுக்கும், பெண்ணுக்கும் தலைவரானீர் " , என்று வாழ்த்தினார்கள்.

கஹ்திர் குஹ்ம் நிகழ்ச்சியை கேட்டறிந்த கிராம அரபி ஒருவன் இறைத்தூதர் (ஸல்) அவர்களிடம் வந்து " அல்லாஹ்வை தவிர இறைவன் இல்லை, நீங்கள் அவருடைய தூதராக இருக்கிறீர்கள் என்று சொன்னீர்கள் நாங்கள் உங்கள் வார்த்தைக்கு கீழ்படிந்தோம், ஐந்து வேளை அல்லாஹ்வைத் தொழுது கொள்ள வேண்டும் என்று சொன்னீர்கள் கட்டுப்பட்டோம். ரமளான் மாதத்தில் நோன்பு வைக்க வேண்டும் என்று கட்டளையிட்டீர்கள், ஏற்றுக்கொண்டோம். மக்காவுக்கு புனிதபயணம் செல்லும் படி

கட்டளையிட்டீர்கள் அதையும் ஏற்றுக் கொண்டோம். ஆனால், நீங்கள் இவைகளில் திருப்தியடையாமல், உங்கள் மருமகன் அலியின் கரங்களை உமது கரங்களால் பிடித்து உயர்த்தி, அலி உங்களுக்கு மௌலாவாக இருப்பார்... அவருக்கு நான் மௌலா என்று சொல்லி, மூஃமின்களுக்கு அவரை தலைவராக்கினீரே ! இது எங்கள் மீது அல்லாஹ் சுமத்திய செயளா....அல்லது உமது சுயவிருப்பமா? என்று கேட்டார். அதற்கு இறைத்தூதர் (ஸல்) "இது அந்த ஒரே இறைவனாகிய அல்லாஹ்வினால் கூறப்பட்டது. அந்த மகத்துவமான, மகிமைப் பொருந்திய அல்லாஹ்விடமிருந்தே வந்தது", என்று கூறினார்கள்.

இதைக் கேட்டவுடன் அந்த கிராம அரபி திரும்பி அவனுடைய ஒட்டகத்தை நோக்கி வருகையில் சொல்கிறான், " யா அல்லாஹ் முஹம்மது (ஸல்) சொல்வது சரியானதாக இருந்தால் எங்களுக்கு வலியும் வேதனையும் உண்டாக்கும்படியாக வானத்திலிருந்து கற்களை எரியும் என்று சொல்லி, அவன் தனது ஒட்டகத்தை அடைவதற்குள் அல்லாஹ் ஒரு கல்லை எரிந்தான். அது அவனது தலையைத் தாக்கி உடம்புக்குள் புகுந்து அவனை சாகடித்தது. இந்த சம்பவம் கீழ்கண்ட வசனம் இறங்குவதற்கு காரணமானது. அல்லாஹ் அவன் உயர்ந்தவன்.

**குர்ஆன் (மஆரிஜ்) 70:1-3** (நிரகரிப்போருக்கு) சம்பவிக்கப் போகும் வேதனைப் பற்றி கேள்வி கேட்பவன் ஒருவன் கேட்கிறான்.

இறை மறுப்பாளர்களுக்கு அதைத் தடுப்பவர் எவருமில்லை; அவ்வேதனை உயர்வழிகளையுடைய அல்லாஹ்வினால் ஏற்படும்.

## இது உண்மையான சம்பவம் என்று சுன்னி அறிஞர்கள் கருதுகிறார்களா?

அதிகமான சுன்னி அறிஞர்கள் இச் சம்பவத்தை குறித்து விரிவாகவும், சுருக்கமாகவும் அறிவித்த செய்திகள் மூலையை குழப்புகிறது. இச்சரித்திர சம்பவமானது நூற்று பத்து நபித் தோழர்களாலும், என்பத்திரண்டு நபியின் பின் வந்த வாரிசுகளாலும், நூற்றுக்கும் அதிகமான இஸ்லாமிய அறிஞர்களாலும், இஸ்லாமிய உலகின் முதலாம் நூற்றாண்டு முதல் பதிநான்காம் நூற்றாண்டு

வரை (A.H) (அதாவது ஏழாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரை B.C) அறிவிக்கப்பட்டது.

செய்திகளில் வரும் செய்தியாளர்களின் வரிசை சுன்னி முஸ்லிம் அறிஞர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவையே இந்த புள்ளி விவரங்களுக்குள் அடங்குகிறது.

தேர்ந்தெடுத்த சில ஆதாரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான அறிஞர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் செய்தியை மேற்கோள் காட்டியது மட்டுமின்றி இவைகள் உண்மையானது என்றும் கூறியிருக்கிறார்கள்.

- ★ அல்- ஹக்கீம் அல்-நேஸபுரி, அல் முஸ்தத்ரக் அல அல்-ஸஹீஹைன் (பெய்ரூட்) பகுதி 3. பக்கம் 109-110 113, 148,533. அல் புஹாரி, முஸ்லீம் மற்றும் அல் தஹஹபி உறுதி செய்ததன் அடிப்படையில் தான் இந்த பாரம்பரியம் வருகிறாது என்று தெளிவாக இந்நூல்களில் இவர் குறிப்பிடுகிறார்.
- ★ அல்-திர்மிதி, சுனன் (கெய்ரோ) பகுதி 5, பக்கம் 633.
- ★ இப்னு மாஜா, சுனன் (கெய்ரோ 1952) பகுதி 1 பக்கம் 45.
- ★ இப்னு ஹாஜர் அல்- அஸ்கலனி, ஃபத் அல்- பரி பி ஸஹரஹ் ஸஹீ அல்- புஹாரி, (பெய்ரூட், 1988) பகுதி 7 பக்கம் 61.
- ★ அல்-ஐனி, உம்தத் அல்- குவரி ஸஹரஹ் ஸஹீ அல் புஹாரி, பகுதி 8 பக்கம் 584.
- ★ இப்னு அல்-அதிர், ஜமி அல்-யுசல் ஐ 277, எண் 65.
- ★ அல்-சூயுடி, அல் துர் அல்-மன்துர், பகுதி 2, பக்கம் 259, 298.
- ★ பக்ஹர் அல்-திபின் அல்- ரஸி, தப்ஸீர் அல்கபீர் (பெய்ரூட் 1981) பகுதி-11, பக்கம் 53.
- ★ இப்னு கதிர், தப்ஸீர் குர்ஆன் அல்-அஸிம் (பெய்ரூட்) பகுதி 2, பக்கம் 14
- ★ அல்-வஹதி, அஸ்பப் அல் நுசல், பக்கம் 164.
- ★ இப்னு அல் அதிர் உஸ்த் அல் கஹாபா பி மரிஃபத் அல் ஸஹாபா (கெய்ரோ) பகுதி 3 பக்கம் 92.
- ★ இப்னு ஹாஜர் அல்- அஸ்கலனி தஹ்திப் அல் தஹ்திப் (ஹைதராபாத் 1325) பகுதி 7 பக்கம் 339.
- ★ இப்னு கதிர் அல் பிதயஹ் வ அல் நிஹயஹ் (கெய்ரோ - 1932) பகுதி 7 பக்கம் 340, பகுதி 5, பக்கம் 213.

- ★ அல்-தஹவி, முஷ்கில் அல் அத்தர் (ஹைதராபாத், 1915) பகுதி 2 பக்கம் 308-9
- ★ நுர் அல்-தின் அல்-ஹலபி அல் ஷ:ஃபி, அல்-சிரஹ், அல்-ஹலபிய்யா பகுதி 3 பக்கம் 337.
- ★ அல்- ஸர்குனி, ஸஹரஹ் அல் மவஹிப் அல் லத்துன்னியா பகுதி 7 பக்கம் 13.

**மௌலா என்ற சொல்லின் அர்த்தம் நண்பனா?**

அனைத்துத் தரப்பு வயதிலிருந்து வந்த ஏராளமான சுன்னி அறிஞர்களின் பார்வைக்கு இறைத்தூதர் (ஸல்) அவர்களின் வரலாற்றுச் சம்பவங்களும், அவரது சொற்களும் உண்மையானது, என்றாலும் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மறைவுக்குப் பிறகு உண்மையில் என்ன நடந்தது என்பதை கண்டறிவதில் ஒருவருக்கொருவர் ஒத்துபோவது கடினமாக இருந்தது. வெளிநோக்கு பார்வையில் குறுகிய ஆவணமாக இச்சம்பவங்களின் விவரம் இருக்கிறது. முக்கியமான குறிப்பு என்னவென்றால், அநேக சுன்னி அறிஞர்கள் கூறுகின்றனர். அலியை முஸ்லிம்களுக்கு நண்பராகவும், உதவியாளராகவும் இருக்க இறைத்தூதர் விரும்பி, வெறுமனே அறிவித்தார்.

பல வெவ்வேறு அம்சங்கள் இந்த நிகழ்ச்சிக்கு மறக்க முடியாத விசேஷத்தை காட்டியது. இறைத்தூதர் (ஸல்) பூமியில் வாழ்ந்த கடைசி காலக்கட்டத்தில் வெளிப்பட்ட வெவ்வேறு குர்ஆன் வசனங்களால், இறைத்தூதர் (ஸல்) உயர்ந்த அதிகாரத்தில் உள்ளவர் என்பதை பெருந்திரள் கூட்ட மக்களால் உறுதி செய்யப்பட்டது. அடுத்தடுத்து வந்த வாழ்த்துகள், அதாவது உமர் மற்றும் பல வெவ்வேறு மக்களாலும், நிகழ்ச்சிகளாலும் நிறைந்த அந்நிகழ்ச்சிகளை ஒரு குறுகிய ஆவணத்துக்குள் அடக்குவது கடினம். இவைகள் அனைத்துமே, இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தனது வாரிசை, தனக்கு பின் பொறுப்பேற்க்கச் செய்யும் நோக்கமாகவே அந்நிகழ்ச்சிகள் இருந்தது. தெளிவாகச் சொல்லப்போனால் இறைத்தூதர் உட்பட மௌலா என்ற வார்த்தை முழு அதிகாரத்தை குறிப்பாக இருக்கிறது. இது தடை செய்யப்படுவதோ, தற்காலிகமானதோ இல்லை.

இந்த சரித்திர முக்கியம் வாய்ந்த இந்த அறிக்கையின் மீது சந்தேகம் இருந்தாலும் மற்றும் இதை மூடி மறைக்கும் சிலரின் முயற்சிகளுக்கும், இவைகள் இறுதி வார்த்தைகளாக இருக்கட்டும்.

கஹதிரின் நிகழ்ச்சிக்கு 10 ஆண்டுகளுக்குப் பிறகு இமாம் அலி அவர்கள் கலீபாவாக இருந்தபோது நபித் தோழராயிருந்த அனஸ் பின் மாலிக்கிடம், " கஹ்திர் தினத்தன்று அல்லாஹ்வின் தூதரிடம் கேட்டதை நீங்கள் ஏன் எழுந்து சாட்சி கொடுக்கவில்லை? என்று கேட்டார். அதற்கு அனஸ் பின் மாலிக், அலியிடம் " ஒ மூஃமின்களின் தலைவரே! எனக்கு வயது சென்றுவிட்டது. எனக்கு ஞாபகம் இல்லை", என்றார். அதற்கு பின்னர் அலி அவர்கள் " நீங்கள் வேண்டுமென்றே உண்மையை தடுத்து நிறுத்தினால் அல்லாஹ் உங்களை வெண்ணிற புள்ளிகளால் (குஷ்டம்) குறியிடுவானாக, அவைகள் உங்கள் தலைபாகையாலும் மறைக்க இயலாது என்றார் ". அனஸ் அவ்விடத்தை விட்டு எழுந்து போவதற்கு முன் அவரின் முகத்தில் ஏராளமான வெண்புள்ளிகளைப் பெற்றார்.

★ இப்னு குத்தைபா அல்-தினவரி, கித்தாப் அல்-மாரிப் (கெய்ரோ, 1353 AH) பக்கம் 251.

★ அஹமத் பின் ஹன்பல், அல் முஸ்நத், பகுதி 1 பக்கம் 119.

★ அபு நுயம் அல்- இஸ்பஹனி, ஹில்யத் அல்-அவுல்யா (பெய்ரூட், 1988) பகுதி 5 , பக்கம் 27.

★ நுர்-அல்-தின் அல்-ஹலபி அல்- ஷஃபிஹீ அல்-சிரா அல் ஹலபியா, பகுதி 3 பக்கம் 336.

★ அல்-முத்தகி அல்-ஹிந்தி, கன்ஸ் அல்-உம்மல் (ஹலப் 1969-84) பகுதி 13 பக்கம் 131.

கஹதிர்குஹ்ம் இவற்றை பற்றிய விரிவான தகவல்களை அறிய

**http://al-islam.org/ghadir/**

## 2. நபி (ஸல்) அவர்களின் இந்த பன்னிரண்டு வாரிசுகள் யார்?

அல்லாஹ்வின் பெயரால்

**ஜாபிர் இப்னு சமுரா அறிவிக்கிறார்கள்; " பன்னிரண்டு தளபதிகள் இருப்பார்கள் என்று இறைத்தூதர் (ஸல்) சொல்ல நான் கேட்டேன்.**

**பிறகு அவர் நான் சொல்லியதை செவியேற்கவில்லை. அதை என் தந்தை சொன்னார்; அவர்கள் அனைவரும் குறைஷிகள் என்பதை இறைத்தூதர் (ஸல்) சேர்த்தே சொன்னார் என்றார்.**

**[ஸஹீ அல்- புஹாரி (ENGLISH) ஹதீஸ் 9.329 கிதாபுல் அஹ்கம்**

**ஸஹீ அல் புஹாரி (ARABIC) 4:165 கிதாபுல் அஹ்கம்]**

**<u>இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்</u> " இந்த மார்க்கம் (இஸ்லாம்) உலகத்தின் இறுதி நாள் (உயிர்பிக்கப்படும் நாள்) வரை தொடரும்; அவை**

**பன்னிரண்டு கலிபாக்களைக் கொண்டிருக்கும்; அவர்கள் அனைவரும் குறைஷிகளே ! "**

**[ஸஹீ முஸ்லீம் (ENGLISH) அத்தியாயம் : 754, பகுதி -3 P1010 TRADITION #4483**

**ஸஹீ முஸ்லீம் (ARABIC) கித்தாப் அல் இமார - 1980 சவுதி அரபியன் பதிப்பு பகுதி -3 பக்கம் - 1453 TRADITION #10]**

**இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பன்னிரண்டு வாரிசுகள் யார்?**
**சுன்னி அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள்:**

**<u>இப்னு-அல்-அரபிக்:-</u> இறைத்தூதர்(ஸல்) அவர்களுக்குப் பிறகு பன்னிரண்டு தலைவர்கள் யார் என்பதை நாங்கள் கணக்கில் வைத்திருக்கிறோம் அவர்கள் கீழ்கண்டவர்கள் என்று கண்டறியப்பட்டது. அபு பக்கர், உமர், உதுமான் அலி, ஹசன், முஆவியா, யஸித், முஆவியா பின் யஸித் மர்வான், அப்துல் மாலிக் இப்னு மர்வான், யஸித் பின் அப்துல் மாலிக் மர்வான் பின் முஹம்மது பின் மர்வான், அஸ்ஸஃபாஹ் இவர்களுக்குப் பிறகு இருபத்தேழு கலீபாக்கள் பனீ அப்பாஸ் பிரிவிலிருந்து வருவார்கள்.**

இப்போது இவர்கள் பன்னிரண்டு பேரை கருத்தில் கொள்வதென்றால் சுலைமான் வரை சேரும்; எழுத்தின் படி சரியாகச் சொல்வதென்றால் நம்மிடத்தில் ஐந்து பேர் மட்டுமே உள்ளனர். இவர்களில் நான்கு பேர்கள் நீதிமான் களாகிய கலீபாக்களும் மற்றும் அப்துல் அல் அஸிஸூம் சேர்த்தே. என்னால் இந்த ஹதீஸின் அர்த்தம் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

[இப்னு அல் அரபி ஷரஹ் சுனன், திர்மிதி 9:68-69]

<u>கதி இயத் அல்-யஹ்சுபி</u> : கலீபாக்களின் எண்ணிக்கை இப்போது சொல்வதை விட அதிகம் தான், இதை பன்னிரண்டு என்று கட்டுப்படுத்தியிருப்பது சரியானது இல்லை. கலீபாக்கள் பன்னிரண்டு பேர்தான் இதற்குமேல் வருவதற்கு இல்லை என்று இறைத்தூதர் சொல்லவில்லை. எனவே இதன் எண்ணிக்கை அதிகமாக இருக்க முடியும்.

[அல்- நவவி ஷரஹ் ஸஹீ முஸ்லீம் 12:201-202

இப்னு ஹாஜர் அல்-அஸ்கலனி ஃபத் அல் பரி, 16:339]

<u>ஜலால் அல்-தின் அல் சுயுடி</u>: நியாயத்தீர்ப்பின் நாள் வரை பன்னிரண்டு கலீபாக்கள் மட்டுமே சத்தியத்தை பூமியில் நிலைநாட்டுவார்கள். அவர்கள் தொடர் நிலையில் இல்லையென்றாலும்,

அந்த பன்னிரண்டு பேரை நாம் பார்க்கையில், இதில் நான்கு பேர்கள் நீதிமான்களாகிய நான்கு கலீபாக்கள் பிறகு ஹசன், முஆவியா, இப்னு ஜூனுபர் கடைசியாக உமர் பின் அப்துல் அஸிஸ் இவர்கள் எட்டு பேர் மீதியுள்ளவர்கள் நான்கு பேர் மஹ்தி அப்பாஸித் கோத்திரத்தில் சேர்க்கப்பட்டிருக்கக் கூடும். அதாவது உமர் பின் அப்துல் அஸிஸ் ஓர் உமய்யத் இவர் அப்பாஸிய கலீபாவாக சேர்க்கப்பட்டது போல மற்றும் தாஹிர். இவர் ஒரு ஆட்சியாளர் இவரும் அப்பாஸிய கலீபாவாக சேர்க்கப்பட்டுள்ளார். இன்னும் இரண்டு வரவில்லை. இவர்களில் ஒருவர் மஹ்தி இவர் அஹ்ல் அல் பைத்திலுள்ளவர்.

[அல் சுயடி தாரிக் அல்- குஹ்ல்ஃப், பக்கம் 12; இப்னு ஹாஜர்
அல்- ஹய்தமி அல்- ஸவய்க் அல் முப்ரிக பக்கம் -19]

இப்னு ஹாஜர் அல் அஸ்கலனி : ஸஹீ புஹாரியின் குறிப்பிட்ட இந்த ஹதீஹை பற்றிய போதிய அறிவு எவருக்கும் இல்லை.எல்லா இமாம்களும் ஒன்று போல ஒரே நேரத்தில் இருப்பார்கள் என்று சொல்லுவது சரியில்லை.

இப்னு அல்- ஜாவ்ஸி : பனீ உமய்யாவின் முதல் கலீஃபாவாக யஸித் பின் முஆவியா கடைசியாக மர்வான் அல் ஹிமர். இவர்களுடைய எண்ணிக்கை பதிமூன்று, உதுமான், முஆவியா மற்றும் இப்னு ஜூபைர், நபித் தோழர்களுடன் இருந்த இவர்கள் மூவரும் இதில் சேர்க்கப்படவில்லை.

மர்வான் பின் அல் ஹக்கம் நபித்தோழராக இருந்து இருக்கிறார் என்பதில் சர்ச்சைகள் இருப்பதாலும் அப்துல்லா பின் ஜூபைர் மக்களிடத்தில் செல்வாக்கு அடைந்த நிலையில், இவர் அதிகாரத்தைப் பெற்றதாலும் இவரை நாம் தவிர்வித்தால், நமக்கு பன்னிரண்டு என்ற எண்ணிக்கை கிடைக்கும்.

பனீ உமய்யா பிரிவிலிருந்து கலீபாக்கள் வந்தபோது பெரிய பிரச்சினை எழுந்தது. பனீ அப்பஸியாக்கள் தங்களை கலீபாவாக நியமித்துக் கொள்ளும் வரை நீடித்தது. எனவே உண்மையான நிலமை முற்றிலும் மாறியது.

[இப்னு அல்- ஜாவ்ஸி, கஷ்ஃப் அல்-முஷ்கில், இப்னு
ஹாஜர் அஸ்கலனி ஃபத் அல்-பரி 16-340
இப்னு அல்- ஜாவ்ஸி யிலிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளது]

அல்-நவவி : இஸ்லாம் மேலாதிக்கம் செலுத்தும் காலங்களில், இந்த பன்னிரண்டு இமாம்கள் இருப்பார்கள் என்றும் அர்த்தம் கொள்ள முடிகிறது. இஸ்லாம் அந்த காலத்தின் போது மதத்தை (மார்க்கம்) ஆதிக்கம் செலுத்தும். இந்த கலீபாக்கள் தங்களுடைய பதவி காலத்தில் மார்க்கத்தை மகிமைப்படுத்துவார்கள்.

[அல்- நவவி ஷரஹ் ஸ்ஹீ முஸ்லீம் 12: 202-203]

அல்-பைஹகி : இந்த பன்னிரண்டு என்ற எண்ணிக்கை இப்னு அப்துல் மாலிக் வரை காணப்பட்டது. இதற்கு இதில் பெருங்குழப்பமும், பிரச்சினைகளும் ஏற்பட்டது. பிறகு அப்பாஸிய கலீபாக்கள் ஆட்சி வந்தது. இதனுடைய அறிக்கையில் இமாம்களின் எண்ணிக்கை அதிகரித்தது. சிலரை

அவர்களின் குணாதிசயத்தின் படி புறக்கணித்தால்; இதற்கு பிறகு வந்த பிரச்சனை அவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்தது.

[இப்னு கதிர், தாரிக் 6:249 அல் சுயுடி தாரிக் அல்- குஹலஃப் பக்கம் 11]

<u>இப்னு கதிர் :</u> வலித் இப்னு யஸித் இப்னு அப்துல் மாலிக் காலம் வரை, ஜாமத் என்று பொருள்படும்; ஒருவர் பின் ஒருவராக வந்த கலீபாக்கள் என்ற பைஹக்கின் கருத்தை எவரெவர் பின்பற்றுகிறாரோ அவர்கள் மீறுகிறவர்கள் இத்தகையவர்கள், பாரம்பரியத்தின் முன்னோட்டத்தின் கீழ் எங்களால் குறிப்பிடப்பட்டு விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் உரியவராவார்கள். மற்றும் அப்துல் மாலிக் இவருக்கு முன்னால் இப்னு ஜூபேரை கலீபாவாக ஏற்றுக் கொண்டால் எண்ணிக்கை மொத்தம் பதினாறாக வரும். அதே சமயம் உமர் இப்னு அப்துல் அஸிஸ் இவருக்கு முன்னால் எண்ணிக்கை பன்னிரண்டாக இருக்க வேண்டும். இந்த முறையில் யஸித் இப்னு மூஆவியாக உட்படுகிறார் உமர் இப்னு அப்துல் அஸிஸ் இருக்கவில்லை. எப்படியாயினும், உமர் இப்னு அப்துல் அஸிஸ் உண்மையும் நீதியுமுள்ள கலீபா என்று அதிகபட்ச உலாமாக்கள் அறிவித்திருக்கிறார்கள்.

[இப்னு கதிர் தாரிக் 6: 249-250]

## <u>குழப்பம்:</u>

உண்மையில் அந்த பன்னிரண்டு வாரிசுகள், கலீபாக்கள் அமீர் மற்றும் இமாம்கள் யார் என்பதை தெளிவுபடுத்த, இறுதியாக வேறொரு சுன்னி முஸ்லீம் அறிஞர் நமக்குத் தேவைப்படுகிறார்.

ஷத்ருத்தின் இப்ராஹீம் பின் முஹம்மது பின் அல்- ஹமவேஹ் அல் ஜூவேய்னி அல்-ஷஃபி என்பர் சிறந்த ஹதீஸ் கலைஞர் என்று, அல்-தஹஹபி, தத்ஹ்கிரத் என்ற நூலில் பகுதி -4 பக்கம் 298 யிலும், இப்னு ஹாஜர் அல்-அஸ்கலனி, அல் தர்ரூர் அல் கமினஹ் நூலில் பகுதி -1 பக்கம் 67லும் கூறியிருக்கிறார்கள் “ நான் முதன்மையான தூதர், அலி அவர்கள் என் வாரிசுகளில் முதன்மையானவர் ஆவார். எனக்கு பின் எனது வாரிசாக பன்னிரண்டு பேர் வருவார்கள். இவர்களில், முதலில் அலி பின் அபிதாலிப்பும், கடைசியாக அல் மஹ்தியும் இருப்பார். என்று

இறைத்தூதர்(ஸல்) அறிவித்த செய்தியை, அப்துல்லா பின் அப்பாஸ்(ரலி) இடமிருந்து பெற்று அறிவித்தவர் இதே அல் ஜூவேய்னிதான்.

இறைத்தூதர் அவர்கள் கூறியதாக, இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்ததாக அல் ஜூவேய்னி அறிவிக்கிறார்கள் "நிச்சயமாக என்னுடைய கலீபாக்கள், எனது பிரதிநிதிகள் மற்றும் தனது படைப்பின் மீதுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகள் எனக்கு பின் பன்னிரண்டு பேர்களாவர்கள்.முதலாவதாக எனது சகோதரரும் இவர்களில் கடைசியானவர் எனது மகனுமாவார்," என்று இறைத்தூதர் கூறியபோது, அல்லாஹ்வின் தூதரே! உம்முடைய சகோதரர் யார் என்று இவர் கேட்டதும், அவர் அலி பின் அபிதாலிப் என்று பதில் வந்தது. பிறகு உம்முடைய மகன் யார் என்று கேட்டப்போது, அவர் அல் மஹ்தி என்று இறைத்தூதரிடமிருந்து (ஸல்) பதில் வந்தது. மேலும் இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள்," இவர் (அல்மஹ்தி) உலகத்தை நீதியிலும், சமத்துவத்திலும் நிரப்புவார், எப்படியனில் உலகம் அநீதியிலும், கொடுமையிலும் நிரம்பி வழிந்தபோது உலகிற்கு எச்சரிக்கையும், நற்செய்தி கூறவும் யாரால் நான் எழுப்பப்பட்டேனோ! அதே போல் தான் உலகம் முடிவதற்கு இன்னும் ஒரு நாள் தான் மீதியிருப்பதாக இருந்தாலும் சர்வவல்லமையுள்ள அல்லாஹ் அல் மஹ்தியை அனுப்பும் வரை உலகத்தின் நாட்களை நீடிக்கச் செய்வான். மேலும் அவனது ரூஹ் ஆகிய ஈஸா பின் மர்யம் (அலை) அவர்களை இறங்க செய்து அல் மஹ்தியின் பின் நின்று தொழ வைப்பான். இவரது பிரகாசத்தினால் பூமி வெளிச்சமாகும் இவரது வல்லமை கிழக்கிலும் மேற்கிலும் சென்றடையும்.

" நானும் அலியும் மற்றும் ஹசன் ஹூசேய்ன் மற்றும் அவரது ஒன்பது வம்சாவளியினரும் பரிசுத்த ஆவியால் சுத்தமாக்கப்பட்டவர்கள்," என்று இறைத்தூதர் கூறியதாக மேலும் ஒரு ஹதீஸை அல்-ஜீவேய்னி அறிவிக்கிறார்கள்.

[அல்- ஜூவேய்னி, ஃபரயத் அல் சிம்டேய்ன், முவாஸ்ஸஸட்

அல்-மஷ்முதி லி-தப்பாஹ், பெய்ரூட் 1978, பக்கம் 160.]

அனைத்து இஸ்லாமிய சிந்தனைக்குரிய பள்ளிகளின் இடையே, "ஷியா இமாமிய்யஹ் இத்னா ஆசாரியஹ் மட்டும் இந்த பன்னிரெண்டு வாரிசுகளை நம்புகிறார்கள். மேலும், அவர்கள் இறைத்தூதரிடம், இஸ்லாம் மார்க்கத்தை

புரிந்து பெற்றுக்கொண்ட அவரது சரியான வாரிசுகள் ஆவார்கள் என்றும் நம்புகிறது.

மேலும் விவரங்கள் அறிய:

**http://a'-islam.org/faq/**

## 3. நபி (ஸல்) அவர்களின் குடும்பத்தை ஏன் பின்பற்ற வேண்டும்?

அல்லாஹ்வின் பெயரால்

நபியின் வீட்டையுடையவர்களே! (அஹ்ல்-அல்-பைத்) நிச்சயமாகவே உங்களின் அசுத்தத்தை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கவே அல்லாஹ் நாடுகிறான்.

[சுத்தமாக்கும் குர்ஆன் ஆயத்திலிருந்து.அல் அஹ்ஸாப் 33:33]

"அல்லாஹ்வின் தூதரே ! நீங்கள் ஆசீர்வதிக்கப்பட நாங்கள் வழிப்பட்டு, அல்லாஹ்விடம் உங்களுக்காக வேண்டிக் கொள்வது எப்படி?" என்று நபித் தோழர்கள் அவரிடம் கேட்டனர். அதற்கு இறைத்தூதர் (ஸல்) அவர்கள், "நீங்கள் சொல்லுங்கள், யா அல்லாஹ் இப்ராஹீம் (அலை) அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் நீர் ஆசீர்வதித்து போல, முஹம்மது (ஸல்) அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் நீர் ஆசீர்வதிப்பீராக! நீர் போற்றப்படக்கூடியவனும், மிகக் கருணையாளனுமாயிருக்கிறீர்;" என்று கூறினார்.

[ஸஹீஹ் அல் புஹாரி பகுதி-4 புத்தகம்-55 எண்-589]

## *ஏன் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தை பின்பற்றுவது அவசியம்?*

இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களின் இரட்டை மரபாகிய **[LEGACY]** குர்ஆன் மீதும், அஹல்-அல்-பைத் என்று சொல்லப்படும் அவரது குடும்பத்தினர் மீதும் ஷியாக்கள் நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்கள். அஹ்ல்-அல்-பைத் என்பது இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட, அவருடைய வழிமுறையாய் ( சுன்னா ) இருக்கிறது. இவைகள் இரண்டின் மூலம் பெற்றுக் கொள்ளும் உபதேசம் மட்டுமே, உண்மையான வழிக்காட்டுதலை முஸ்லீம் அடைய முடியும் என்பது உறுதி.

## *இறைத்தூதர் (ஸல்) அவர்களின் குடும்பத்தின் தனிச் சிறப்பு என்ன?*

குர்ஆன் கூறுகிறது.( அஷ்ராஷு)42:23 (முஹம்மதே) நீர் சொல்லும், நெருங்கிய உறவினர்களின் மீது அன்புக் கொள்வதைத் தவிர; நான் இதற்காக (அல்லாஹ்வின் செய்தியை எடுத்துரைப்பதற்காக ) எந்த கூலியும் உங்களிடம் கேட்கவில்லையென்று.

மேற்கண்ட இந்த வசனம் வெளிபடும்போது, " நாங்கள் பேணிக் கொள்ள வேண்டிய; எங்களின் கடமையாக உள்ள உங்களின் நெருக்கமான அன்பின் சொந்தங்கள் யார்,"? என்று முஸ்லிம்கள் கேட்டனர்.

அதற்கு இறைத்தூதர், **"அலி, பாத்திமா மற்றும் அவர்களுடைய இரண்டு மகன்கள்"**, என்று பதிலளித்தார்கள்.

- ★ அல்-ஹக்கிம் அல் நேஸபுரி, அல் முஸ்தத்ரக் அல அல் ஸஹீஹைன், பகுதி 2, பக்கம்-444.
- ★ அல்-கஸ்டல்லனி, இர்ஷாத் அல்-ஸரி ஸாராஹ் ஸஹீஹ் அல்-புஹாரி. பகுதி-7, பக்கம்-331
- ★ அல்-சூயுடி, அல்-தர் அல் மன்துர், பகுதி -6, பக்கம் 6-7
- ★ அல்-அலுசி அல்-பக்ஹ்ததி, ருஹ் அல்-மா அனி பகுதி-25, பக்கம்31-2

நஸ்ரானிய கிறிஸ்தவர்களுக்கும், நபிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டபோது, அஹல் அல் பைத்திலுள்ளவர்களின் உண்மை மற்றும் ஒழுக்க நிலையை உறுதிபடுத்தும் விதமாக குரானில் ஒரு ஆயத் (வசனம்) இறங்கியது.

ஆலுஇம்ரான் (3:61) நபியே! (இதைபற்றிய) விளக்கம் உனக்கு வந்த பின்னரும், எவரேனும் ஒருவர் உம்மிடம் இதைக் குறித்து தர்க்கம் செய்தால், வாருங்கள்! எங்கள் புதல்வர்களையும், உங்கள் புதல்வர்களையும் அழைப்போம். எங்கள் பெண்களையும், உங்கள் பெண்களையும் அழைப்போம். நீங்கள் வாருங்கள், நாங்களும் வருகிறோம்; பின்பு பொய்யர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் இறங்கட்டும் என்று பிரார்த்தனை செய்வோம், என்று நபியே நீர் கூறும்.

இவ்வசனத்திற்கு பின்னர் நபி அவர்கள், அலி பாத்திமா மற்றும் அவர்களுடைய இரண்டு மகன்களாகிய அல் ஹசன், அல் ஹூசேய்ன் இவர்களை அழைத்து " யா அல்லாஹ் இவர்களே எனது குடும்பத்தின் உறுபினர் என்று அறிவித்தார்.

- ★ முஸ்லிம், அல்-ஸாஹீ (ஆங்கில மொழிப்பெயர்ப்பு) புத்தகம் 031. எண்:5915
  அல் ஹக்கிம் அல் நேஸபுரி, அல் முஸ்தத்ரக் அல அல் ஸஹீஹன், பகுதி -3, பக்கம் – 150. இது அல் புஹாரி முஸ்லீம் ஸஹீயான ஹதீஸிக்கு ஏற்ற அடிப்படையில் உள்ளது என்று இவர் கூறுகிறார்.
- ★ இப்னு ஹாஜர் அல்-அஸ்கலனி, ஃபத் அல்-பரி ஷரஹ்,ஸஹீ அல் புஹாரி, பகுதி – 7, பக்கம் – 60.
- ★ அல்-திர்மிதி, அல் ஸஹீ, கிதாப் அல் மனகிப் பகுதி-5, பக்கம்-596
- ★ அஹமத் பி, ஹன்பல், அல்-முஸ்நத் பகுதி-1, பக்கம்-185.
- ★ அல் சுயுடி, கலிப்பாக்களின் வரலாறு Who took the right way (லண்டன் 1995) பக்கம் 176.

## *குர்ஆன் மீது காட்டும் மரியாதை போதுமானதாக இல்லையா?*
## *அஹ்ல் அல் பைத்தின் மீதும் போதுமான மரியாதை தேவையா?*

என்று நினைத்தால், நிச்சயமாக முஸ்லிம்களுக்கு வேறுவழியில்லை, இவைகள் இரண்டையுமே பின்பற்ற வேண்டும்.இதன் மூலமே முஸ்லிம்கள்

சரியான ஆன்மீக வாழ்காட்டுதலை காணமுடியும். இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் தன்னுடைய சொத்தாக,[Legacy] இரண்டை முஸ்லிம்களிடம் விட்டு செல்வதாகவும், அவ் விரண்டையும் மறுமை நாள் வரை காத்துக்கொள்ளவும் மக்களிடம் வாக்குறுதி பெற்றார்கள்.

அதாவது இரட்டை மரபாகிய **[Twin Legacy]** குர்ஆனும் அவரது குடும்பத்தினரும், அவர்கள் கூறினார்கள், இவ்விரண்டிற்கு மரியாதைக் காட்டுவது மட்டுமன்றி இதன் மூலம் இஸ்லாமியக் கல்வியும் (கோட்பாடு) ஹதீஸ் மற்றும் தப்ஸீரை பின் பற்றி நடப்பது போன்ற விரிவான காரியங்களின் அறிவைப் பெறலாம் என்றார்கள்.

**“ என்னுடைய, இந்த அஹல் அல் பைத்தை பிடித்துக் கொள்ளுங்கள், இது எதை போன்றது என்றால் நூஹ் நபி (அலை)யின் கப்பலை போன்றது. நம்பிக்கைக் கொண்டு உள்ளே சென்றவர்கள் காப்பாற்றப்பட்டார்கள் அதை அலட்சியம் செய்தவர்கள் உயிரிழந்தார்கள் , ”.** என்று முஹம்மது நபி (ஸல்) கூறினார்கள்.

- ★ அல் ஹக்கிம் அல் நேஸபுரி, அல்-முஸ்தத்ரக் அல அல் ஸஹீஹைஹன் பகுதி-3 பக்கம் 151. மற்றும் பகுதி-2 பக்கம் 343, முஸ்லிம் ஹதீஸ் அடிப்படையில் இது ஸஹீயானது என்று கூறுகிறார்.
- ★ அல் சூயுடி, அல் தர் அல் –மன்துர் பகுதி-1 பக்கம் -7
- ★ இப்னு ஹாஜர் அல் மக்கி, அல் ஸாவைக் அல் முஹ்ரிக பக்கம் 140. இவர் கூறுகிறார், இது காலகாலமாக பரம்பரை பரம்பரையாக, ஒன்றையொன்று உறுதி செய்து கொள்ளும் அளவிற்கு சங்கிலித் தொடர்போல வந்து கொண்டே இருக்கிறது.

## இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் மரணசாசனம் (வஸ்ஸியத்)

என் இறுதி அழைப்பிற்கு பதில் கூறும் நிலையில் நான் இருக்கிறேன். நிச்சயமாக, விலைமதிப்பற்ற இரண்டை (தக்கலேன்) உங்களிடையே விட்டுச் செல்கிறேன்.

ஒன்று அல்லாஹ்வின் வேதம், மற்றொன்று அஹ்ல் அல் பைத் என்று சொல்லப்படும் என்னுடைய குடும்பத்தினர், நிச்சயமாக, நீங்கள் எனக்கு பின்னால் அந்த தடாகத்தின் ( அல்கவ்ஸர் )அருகில் நிற்கும் வரை இவை இரண்டும் ஒன்றையொன்று பிரியாது என்று கூறினார்கள்.

இது அங்கீகரிக்கப்பட்ட ஹதீஸாக முப்பதுக்கும் மேலான ஸஹாபாக்களால் விவரிக்கப்பட்டிருக்கிறது. மேலும், அதிக படியான சுன்னி முஸ்லீம் அறிஞர்களாலும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சில பிரசித்த பெற்ற ஹதீஸ்களின் மூலம்,
பின் வருமாறு......

- ★ அல்-ஹக்கிம் அல்-நேஸபுரி, அல் முஸ்தத்ரக் அல-அல்- ஸஹீஹைஹன் (பெய்ரூட்) பகுதி – 3, பக்கம் 109-110, 148, 533. இவர் வலியுறுத்துகிறார், இவைகள் புஹாரி, மற்றும் முஸ்லிம்

ஹதீஸ்களின் மூல அடிப்படையில் கொண்டுள்ளது என்று அல்-தஹஹபி இத்தீர்ப்பை உறுதி செய்தார்.

- முஸ்லிம், அல்-ஸஹீ (ஆங்கில மொழிபெயர்ப்பு) புத்தகம் 031. எண்கள் 5920-3.
- அல் திர்மிதி, அல் ஸ்ஹீ பகுதி-5 பக்கம் 621-2 எண்கள் 3786, 3788 பகுதி 2 பக்கம் 219.
- அல்-நஸய் கஹஸிஸ் அலி இப்னு அபிதாலிப் ஹதீஸ் எண் 79.
- அஹமத் பி, ஹன்பல், அல் முஸ்நத், பகுதி 3 பக்கம்-14,17,26. பகுதி 3 பக்கம் 26,59, பகுதி – 4 பக்கம் 371 பகுதி 5 பக்கம் 181-2, 189-190.
- இப்னு அல் அதிர், ஜமி அல் உசுல், பகுதி-1 பக்கம் -277.
- இப்னு கதிர், அல் பித்தாயஹ் வ அல்-நிஹயஹ் பகுதி-5 பக்கம் 209. இவர் குறிப்பிடுகிறார். இவைகள் ஸஹீயான ஹதீஸ் என்று அல் தஹஹபி உறுதி செய்தார்.
- இப்னு கதிர், தப்ஸீர் அல் குர்ஆன் – அல் அஸிம், பகுதி-6 பக்கம் – 199.
- நஸிர் அல்-தின் அல்- அல்பனி, ஸில்ஸிலத் –அல்- அஹதித் அல் ஸஹீஹ (குவைத் : அல்-தர் அல் ஸல.ஃபியா) பகுதி 4 பக்கம் 355-8. இவைகள் நம்பத்தகுந்த சங்கிலித்தொடர் போல் வரும் விரிவுரைகள் என்று கூறுகிறார்

இன்னும் இதை விட அதிகமான ஹதீஸ்கள் ஆதாரங்கள் இங்கே குறிப்பிட முடியும்.

## எனக்குப் பின் அல்லாஹ்வின் வேதத்தையும், என் வழிமுறைகளையும் ( சுன்னா ) விட்டுச் செல்கிறேன் என்று இறைத்தூதர் கூறினாரா?

அப்படியென்றால், இது மக்களிடையே பரவி பிரபலமாகி விட்ட தவறான கருத்து. உண்மையிலேயே இதற்கு காரணமான, நம்பத்தகுந்த அடிப்படை ஆதாரம் கூட இறைத்தூதரின் இறுதி பேருரையில் இல்லை.
ஸஹீயான ஆறு புத்தங்களில் கூட இவைகளைப் பற்றி செய்தி வரவில்லை.

மாலிக்கின் முவத்த, இப்னு ஹிஷாமின் சிரத் ரசூலுல்லாஹ், அல் தபரிஸின் தாரிக் இவர்களின் பதிப்புகளில் கூட மேற்கூறிய செய்தியின் தொடர்ச்சி முழுமையடையாத காரணத்தினால் அறிஞர்களால் சரியாக எடுத்துரைக்க முடியாதபடி பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. தொடர்புகளும் தொடர்ச்சியும் முழுமை பெறாமல் துண்டிக்கப்பட்ட நிலையே உள்ளது. வேறு, மற்ற பதிப்புகளில் இதைப் பற்றிய செய்தியில் தொடர்ச்சி விட்டு போகாமல் இருந்தாலும், ஆனால் அவைகள் சில மட்டுமே.

மேலும் அனைவருமே நம்பமுடியாததாகக் கருதப்படும் ரிஜால் என்னும் முன்னனி சுன்னி அறிஞர்களை அந்நூல்கள் கொண்டு இருக்கிறது. அந்த நூல்கள் சம்பந்தப்பட்ட புத்தகங்களை குறிப்பிடுவதன் மூலம் ஆராய்ச்சியில் ஆர்வமுள்ள ஆய்வாளர்கள், இந்த குறிப்பிடத்தக்க உண்மையை உறுதி படுத்த முடியும்.

தெளிவாக, இறைத்தூதர் (ஸல்) அவர்களின் சுன்னாவை பின் பற்ற வேண்டியதில்லை என்று எவரும் எடுத்துரைக்கவில்லை. முன்பு சொல்லப்பட்டது போல, அஹ்ல் அல் பைத்தை முஸ்லீம்கள் பற்றிக் கொண்டாலே, அதுவே நம்பகமானதும், தூய்மையானதும், இறைத்தூதர் சுன்னத்தை பின் பற்றும் பரிசுத்த

ஆதாரமாக உள்ளது. இதையே இறைத்தூதர் (ஸல்) முஸ்லிம்களிடத்தில் விரும்பினார்.

## அஹ்ல்-அல்-பைத்திற்குட்பட்டோர்கள் யார்?

இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் குடும்ப உறுப்பினர்களே, அஹ்ல்-அல்-பைத்தில் ஒருவர் பின் ஒருவராக வருகிறார்கள் என்பதையே நமக்கு குறிப்பிட்டுக் காட்டுகிறது. இத்ராஹ், ஆல் (Itrah and Aal) அதாவது இறைத்தூதரின் மகள் பாத்திமா- அல்-ஸஹ்ரா, இவருடைய கணவர் இமாம் அலி மற்றும் இவர்களுடைய இரண்டு மகன்கள் இமாம் அல்-ஹசன், இமாம்-அல்-ஹூசேய்ன் மற்றும் இக்குடும்பத்தின் தலைவராக இறைத்தூதர் முஹம்மது(ஸல்) அவர்களையும் சேர்த்து ஐந்து நபர்களாகிறார்கள்.

குர்ஆன் ஆயத்துகள் இறங்குகிற காலந்தொட்டே இவர்கள் இறைத் தூதரோடே இணைந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இவர்களை அடுத்து இமாம் அல்-ஹூசேய்னின் வழித்தோன்றல்களில் வந்த ஒன்பது இமாம்களும் இக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்களில் இறுதியானவராக இமாம் அல்-மஹ்தி (அலை) வருகிறார். இறைத்தூதர் முஹம்மது (ஸல்) கூறினார்கள்.

- ★ “ நானும், அலியும் மற்றும் அல் ஹசன், அல் ஹூசேய்ன் மற்றும் அல் ஹூசேய்னின் வழித் தோன்றல்களாகிய ஒன்பது பேரும் பரிசுத்த ஆவியானவரால், பரிசுத்தமாக்கப்பட்டவர்கள்.”
- ★ [அல்-ஜீவேய்னி, பரித் அல் சிம்டெயன் ( பெய்ரூட் 1978 ) பக்கம் – 160. இவரது ஹதீஸ்கள் அல் தஹஹபியினால் உறுதி செய்யப்பட்டுள்ளது. தத் கிராத் அல் ஹீபஸ்- பகுதி – 4 பக்கம் 298]
- ★ மேலும் இப்னு ஹாஜர் அல் அஸ்கலனி என்பவராலும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. [அல் துர் அர் அல் கமினஹ் பகுதி – 1 பக்கம் – 67]
- ★ நான் பிரதான தூதராகவும், அலி இப்னு அபிதாலிப் என்னுடைய முதன்மை வாரிசாவார். எனக்கு பின் பன்னிரெண்டு வாரிசுகள் தோன்றும், இவர்களில் முதல் வாரிசாக அலி பின் அபிதாலிப்பும் கடைசியாக அல் மஹ்தியும் இருப்பார். [அல் ஜீவேய்ன்.... பரித் அல் சிம்டேய்ன், பக்கம் 160.]
- ★ அல் மஹ்தி, அஹ்ல் அல் பைத்தில் ஒருவராவார். இவர் என்னுடைய குடும்பத்திலிருந்து வருவார். இவர் பாத்திமாவின் (அலை) வழித்தோன்றல் ஆவார்.
- ★ [இப்னு மாஜா அல்சுனன், பகுதி -3 பக்கம் 519, ஹதீஸ் எண்-4085 – 6; அபு தாவூத் அல்சுனன் பகுதி – 2 பக்கம் 207.]

## இறைத்தூதரின் மனைவிகளின் நிலையென்ன?

பரிசுத்தப்படுத்துதலின் ஆயத்திலே (வசனம்) “ நபியின் வீட்டையுடையவர்களே அஹ்ல்-அல் பைத் நிச்சயமாகவே, உங்களுடைய அசுத்தத்தை நீக்கி, உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்கவே அல்லாஹ் நாடுகிறான். என்ற ஆயத் நபியின் மனைவியாகிய உம் சலாமா அவர்கள் வீட்டில் இறங்கிய போது, அப்போது இறைத்தூதர் அவர்கள், **அல் ஹசன், அல் ஹூசேயன், பாத்திமா மற்றும் அலி** அவர்களை அழைத்து, அவர்கள் அனைவரையும் ஒரு போர்வைக்குள் ஒன்று சேர்த்து “யா அல்லாஹ் இவர்கள்தாம் அஹ்ல் அல் பைத்திற்குரிய என்னுடைய

குடும்பத்தினர். அசுத்தத்தை விட்டு இவர்களை நீக்கி, இவர்களை பரிசுத்தப்படுத்துங்கள்," என்று கூறினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த உம் சலாமா, "இவர்களுடன் நானும் இருக்கிறேனா?" என்று கேட்டார்கள். " நீங்கள் உங்களிடங்களிலேயே தங்கியிருங்கள்", நல்லொழுக்கத்திற்குரியவராவீர்கள், என்று இறைத் தூதர் பதிலளித்தார்கள்.

- ★ அல் திர்மிதி, அல்-ஸ்ஹீஹ, பகுதி -5 பக்கம் 351,663
- ★ அல்-ஹக்கிம் அல் நேஸபுரி, அல் முஸ்தத்ரக் அல அல் ஸஹீஹைஹன், பகுதி-2 பக்கம் 416. இது அல் புஹாரியின் ஸஹீயான ஹதீஸ்க்கு ஏற்ற அடிப்படையில் உள்ளது என்று இவர் கூறுகிறார்.
- ★ அல்-ஸீயுடி, அல் தர் அல் மனதூர் பகுதி -5 பக்கம் 197.

சுத்தமாக்கும் ஆயத் பகுதியின் (குர்ஆன் 33:33), ஆரம்ப நிலையில் அடுத்தடுத்து இறைத்தூதரின் மனைவியர்களையே குறிப்பிடுகிறது. அங்கே பாலினம் பெண்மையாகவே இருக்கிறது. அதன் பின் வருகின்ற வரிகளில் பாலினம் ஆணாகவும் மற்றும் கலந்தும் வருகிறது. இது தனிப்பட்ட வெவ்வேறு நபர்களையே குறிப்பிடுகிறது என்பதை தெளிவாகக் காட்டுகிறது.

இன்னும் நீங்கள் இஸ்லாமைப் பற்றிய தெளிவான விளக்கங்களை அஹ்ல் அல் பைதின் மூலம் பெற....

**http://a'-islam.org/fag/**

## 4. ஏன் ஷியா?

இன்னும் நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாகப் பற்றி பிடித்துக் கொள்ளுங்கள். நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள். குர்ஆன் (ஆலு இம்ரான்) **3:103**

**ஷியா ஏன்?**

ஷியா என்பது பண்பு பெயர். யாரெல்லாம் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அஹ்ல் அல் பைத் என்று சொல்லப்படும் அவருடைய குடும்பத்தினரை பின்பற்றுகிறார்களோ! அவர்களை குறிப்பதாகும். இது வகுப்பு வாதத்தையோ அல்லது முஸ்லீம்களிடையே பிரிவினை ஏற்படுத்துவதோ இல்லை. சுன்னி அல்லது ஸல∴பி என்ற சொல் வருவதற்கு முன்பே எப்போதும் ஷியா என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டது. காரணம், குர்ஆன் இவ்வார்த்தையை பயன்பாட்டில் கொண்டிருக்கிறது; இறைத்தூதர் (ஸல்) அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்; மேலும் ஆதி கால முஸ்லீம்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

**குர்ஆனில் ஷியா:** ஷியா என்ற சொல்லின் அர்த்தம் ஒரு குழுவை பின்பற்றுகிறவர்கள், அல்லாஹ், குர்ஆனில் குறிப்பிடுகிறான்; அவரது உண்மையான ஊழியர்களில் சிலர் ஷியாக்களாக இருந்தனர் என்று நிச்சயமாக! இப்ராஹீமும் அவருடைய(நூஹ்) வழியைப் பின்பற்றியவர்களில் ஒருவர் தாம்.குர்ஆன் (அஸ்ஸ∴ப்பாத்) **37 :83.**

**குர்ஆன் கூறுகிறது:** (அல்கஸஸ்) **28:15** நகர மக்கள் கவனக் குறைவாய் இருந்தபோது (மூஸா) அந்நகருக்குள் நுழைந்தார். அங்கு இருவர் சண்டையிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டார். ஒருவன் அவருடைய சமுதாயத்தைச் சேர்ந்தவன். மற்றவன் எதிரிகளின் சமுதாயத்தைச் சேர்ந்தவன். மூஸாவின் சமுதாயத்தைச் சேர்ந்தவன் எதிரியின் சமுதாயத்தைச் சேர்ந்தவனுக்கு எதிராக உதவும் படி கேட்டுக் கொண்டான்.

மதிப்புமிக்க இறைத்தூதர்களைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு ஷியா என்ற சொல், அல்லாஹ்வினால் அதிகாரச் சொல்லாக குர்ஆனில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

மிக நீதியுள்ள ஊழியரை ஒருவர் பின்பற்றுகிறாரென்றால் அவர் ஷியாவாக இருக்கிறதில் தவறு இல்லை. மறுபக்கம் பார்க்கையில் ஒருவன் தவறான செயலும் கொடுமையும் உள்ள ஒருவனை பின்பற்றினால் அவன் தன் தலைவனுடைய விதியின் படியே நியாயத்தீர்ப்பின் நாளை (மறுமைநாள்) சந்திப்பான் குர்ஆன் குறிப்பிடுகிறது. நியாயத்தீர்ப்பின் நாளின் போது மக்கள் கூட்டமாகவும், ஒவ்வொரு கூட்டமும் தன் தலைவனை முன்நிறுத்தியே வருவார்கள்.

**அல்லாஹ் கூறுகிறான்:** (நபியே) நாம் எல்லா மக்களையும் அவர்களுடைய தலைவர்களுடன் அழைக்கும் நாளை நினைவூட்டுவீராக. குர்ஆன் (பனீ இஸ்ராயீல்) **17:71.**

நியாயத்தீர்ப்பின் நாளின் போது ஒவ்வொரு கூட்டத்தாரும் பின்பற்றிய செயல்கள் அவர்களது தலைவர்களின் (இமாம்) செயல்களைப் பொருத்தே இருக்கும் (உண்மையாகவே) அந்தந்த தலைவர்களை பின்பற்றியவர்கள்.

இரண்டு வகையான இமாம்களை (தலைவர்களை) அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகிறான்.

குர்ஆன் (அல் கஸஸ்) **28:41,42** நாம் அவர்களை நரகத்தின் பக்கம் அழைக்கும் தலைவர்களாக ஆக்கினோம். மேலும், மறுமைநாளில் எங்கிருந்தும் எவ்வித உதவியும் அவர்களால் பெறமுடியாது.

இவ்வுலகில் சாபம் அவர்களைத் தொடரும்படிச் செய்தோம். மேலும், மறுமை நாளில் அவர்கள் மிகவும் அருவருப்பான நிலைக்கு ஆளாவார்கள்.

மனிதர்களுக்கு நேர்வழிக் காட்ட அல்லாஹ்வினால் நியமிக்கப்பட்ட இமாம்கள் (தலைவர்கள்) இருக்கிறார்கள் என்று குர்ஆன் நமக்கு நினைவூட்டுகிறது.

**குர்ஆன் கூறுகிறது** : (அஸ்ஸஜ்தா) **32:24.** மேலும் அவர்கள் பொறுமையைக் கடைப்பிடித்து, நம் வசனங்கள் மீது உறுதிபாடும் கொண்டிருந்த போது அவர்களிலிருந்து தலைவர்களை நாம் தோற்றுவித்தோம். அவர்களோ நம் கட்டளையைக் கொண்டு வழிகாட்டிக் கொண்டிருந்தார்கள்.

இப்படிப்பட்ட இமாம்களை (தலைவர்களை) உண்மையாய் பின்பற்றியவர்கள் **(Shiah)** நியாயத்தீர்ப்பின் நாளின் போது செழிப்பானவர்களாக இருப்பார்கள்.

**ஹதீஸ்களில் ஷியா :** இஸ்லாமிய வரலாற்றில், விசேஷமாய் இமாம் அலியை பின்பற்றுகிறவர்கள் ஷியா என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த சொல் பிற்கால கண்டுப்பிடிப்புகளாகிய சிலவற்றைப் போல அல்ல. அல்லாஹ்வின் தூதர் அவர்களே, இதை பயன்படுத்திய முதல் நபராவார். கீழ்கண்ட குர்ஆன் வசனம் இறக்கப்படும் போது

குர்ஆன் (அல்பய்யினா) **98:7** எவர்கள் நம்பிக்கைக் கொண்டு, நற்செயல்களும் புரிந்தார்களோ! அவர்கள்தாம் திண்ணமாக, படைப்பினங்களில் மிகவும் மேன்மை வாய்ந்தவர்கள்.

இறைத்தூதர் (ஸல்) அலியிடம் சொன்னார்கள் “இது உனக்கும் உன்னை பின்பற்றுபவருக்கும்” என்று மேலும் அவர்கள் கூறினார்கள். “என் உயிர் எவன் கைவசம் இருக்கிறதோ, அவன் மீது சத்தியமாக இந்த மனிதரை (அலி) பின்பற்றுகிறவர்கள் **(Shiah)** உயிர்ப்பிக்கப்படும் நாளிலே பாதுகாப்பாக விடுதலைப் பெறுவார்கள் என்று கூறினார்.

- ★ ஜலால் அல்-தின் அல்-சுயதி, தப்ஸீர் அல்-தருர் அல்-மன்தூர் (கெய்ரோ) பகுதி **6** பக்கம் **379.**
- ★ இப்னு ஜரிர் அல் தபரி, தப்ஸிர் ஜமி அல் பயான் (பெய்ரோ) பகுதி **33,** பக்கம் **146.**

- ★ இப்னு அஸகிர், தாரிக் திமஷ்க், பகுதி 42, பக்கம் 333, 377
- ★ இப்னு ஹாஜர் அல்-ஹேதமி, அல் சவிக் அல் முஹ்ரிகாஹ் (கெய்ரோ) அத்தியாயம் 11, பிரிவு 1, பக்கம் 246, 247.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், "அலியே (நியாயத்தீர்ப்பின் நாளின் போது) நீயும், உன்னைப் பின்பற்றிய (Shiah)வர்களும் நன்றாக மகிழ்ச்சியுடன், சந்தோஷத்துடனும் அல்லாஹ்வை நோக்கி வருவார்கள். உன் எதிரிகள் கோபத்துடனும், கழுத்து விறைப்பாக (தலை மேல் நோக்கி நீண்டு)வும் அவரிடத்தில் வருவார்கள்.

- ★ இப்னு அல் அதிர், அல்- நிஷ்ய ஃபி கஹரிப் அல் ஹதீஸ் (பெய்ரூட், 1399) பகுதி 4, பக்கம் 106.
- ★ அல்-தபரணி, முஜம் அல் கபிர், பகுதி 1 பக்கம் 319.
- ★ அல்-ஹேதமி, மஜ்ம்-அல், ஸூவேய்த் பகுதி-9,எண்-14168.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "அலியே, நீயும் உன்னை பின்பற்றுகிறவர்களும் சொர்க்கத்தில் இருப்பார்கள் என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்".

- ★ அஹமத் இப்னு ஹன்பல், ஃபதாஹில்-அல் சஹாபா (பெய்ரூட்) பகுதி 2 , பக்கம் 655.
- ★ அபு நுவய்ம் அல்-இஸ்பஹனி, ஹில்யதுல் ஆவுலியா பகுதி 4, பக்கம் 329.
- ★ அல்-கஹதிப் அல் பக்ஹததி, தாரிக் பக்ஹதத் (பெய்ரூட்) பகுதி 12, பக்கம் 289.
- ★ அல் தபரணி, முஜமல் கபிர், பகுதி 1, பக்கம் 319.
- ★ அல் ஹேதமி, மஜ்ம அல் ஸூவேய்த் பக்கம்-21,22
- ★ இப்னு அஸகிர் தாரிக் திம்ஷக் பகுதி 22, பக்கம் 331,332
- ★ இப்னு ஹஜர் அல்-ஹேதமி, அல் சவேய்க் அல் முஹ்ரிகாஹ் (கெய்ரோ) அத்தியாயம் 11, பிரிவு 1, பக்கம் 247.

ஆனால், இறைத்தூதர் (ஸல்) அவர்களால் இதுபோன்ற பிரிவினை சொல்லை எப்படி பயன்படுத்த முடிந்தது?

ஆபிரகாம் பிரிவினைவாதியா? இறைத்தூதர் நோவா மற்றும் இறைத்தூதர் மூஸா இவர்கள் எப்படி பட்டவர்கள்? ஷியா என்பது பிரிவினை வாதத்தில் இருக்குமென்றால், இந்த வார்த்தையை மதிப்புமிக்க இறைத்தூதர்களுக்கு அல்லாஹ் பயன்படுத்தி இருக்கமாட்டான்.

இறைத்தூதர் (ஸல்) இவர்களை பாராட்டி இருக்கமாட்டார்.

முஸ்லீம்கள் கூட்டம் கூட்டமாக பிரிந்து இருப்பதை இறைத்தூதர் (ஸல்) அவர்கள் விரும்பியது இல்லையென்பதை இது அழுத்தமாகக் கூறுகிறது. தனக்கு பின் வாரிசாகவும், கலீபாவாகவும், பிரதிநிதியாகவும் இமாம் அலியையே! பின்பற்றும் படி, இறைத்தூதர் (ஸல்) தான் வாழும் காலத்திலேயே மக்களுக்கு கட்டளையிட்டார். எதிர்பாராதவிதமாக இறைத்தூதரின் வார்த்தையை கேட்டுக் கொண்டவர்கள் சிலரே, இவர்கள் அலியை பின்பற்றுகிறவர்கள் **(Shiah of Ali)** என்று கருதப்பட்டார்கள். மனித குலத்திற்கு கருணையாளனாக விளங்கிய இறைத்தூதர் முஹம்மது (ஸல்) மறைவுக்கு பின் இவர்கள் வேறுபடுத்தப்பட்டு, தொடர் துன்பங்களுக்கும், தொல்லைகளுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். எல்லா முஸ்லீம்களும் இறைத்தூதரின் (ஸல்) விருப்பத்திற்கு கீழ்படிந்திருந்திருப்பார்களென்றால் இஸ்லாமில் எந்த பிரிவும் வந்திருக்காது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள், சீக்கிரத்தில் உங்களிடையே குழப்பமும், வெறுப்பும் தோன்றும் இது போன்ற சூழ்நிலை எழும்போது நீங்கள் இமாம் அலியைத் தேடுங்கள் அவர்தான் உண்மையிலிருந்து பொய்யை பிரித்து காட்டுவார், என்றார்கள்.

★ அலி முத்தகி அல்-ஹிந்தி, கன்ஸல் உம்மல் ((முல்தன்) பகுதி-**2**, பக்கம் **612.** எண் **32964.**

ஆரம்ப காலங்களில் குர்ஆனின் வசனம் குறிப்பிட்ட படி இமாம் ஜாபர் அல் சாதிக், இவர் ஆறாவது ஷியா இமாமாக இருந்தவர், இறைத்தூதரின் அஹ்ல் அல் பைத்திற்குள்ளவர்; இவரிடமிருந்து சில சுன்னி அறிஞர்கள் எடுத்துக் கூறுகிறார்கள்.

நாம் எல்லாரும் அல்லாஹ்வின் கயிறு என்று அல்லாஹ் யாரிடம் சொல்லியிருந்தார். மேலும் எல்லோரும் ஒன்று சேர்ந்தாற் போல் சீக்கிரமாக பிடித்துக் கொள்ளுங்கள் உங்களிடையே பிரிவினை வேண்டாம் என்று**?**

★ அல்-தஹலபி, தப்ஸீர் அல்-கபிர், வசனத்தின் விளக்கத்தின் கீழ் **3:103.**

★ இப்னு ஹாஜர்-அல் ஹேய்தமி, அல் ஸவவேய்க் அல் முஹ்ரிகாஹ் (கெய்ரோ) அத்தியாயம் **11,** பிரிவு **1,** பக்கம் **233.**

ஆகவே, அல்லாஹ் பிரிவினைகளுக்கு கண்டித்து உணர்த்துவதினால்தான் அல்லாஹவின் கயிற்றை ஒன்று சேர்ந்து பிடித்துக் கொள்கிறவர்களை விட்டு விட்டு அதை விட்டு பிரிந்து செல்கிறவர்களை கண்டிக்கிறான்.

**முடிவு :** அல்லாஹ்வின் சிறந்த ஊழியர்களுக்கு ஷியா **(Shiah)** என்ற வார்த்தை குர்ஆனில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை காட்டினோம். மேலும் இறைத்தூதரின் பாரம்பரியத்தில் வந்த இமாம் அலியை பின்பற்றுபவர்களுக்கும் அது பொருந்தும் என்பதையும் தெரியப்படுத்தினோம். யாரெல்லாம் இதுபோன்ற தெய்வீக வழிகாட்டுதலை பின்பற்றுகிறார்களோ அவர்கள் மார்க்கத்தில் ஏற்படும் சண்டை சச்சரவுகளிலிருந்து தம்மை காத்து கொள்வது மட்டுமல்லாமல் அல்லாஹ்வின் கயிறை பிடித்தவராக மகிழ்ச்சி அடைந்தவராக சொர்க்கம் செல்வார்கள்.

இஸ்லாமை பற்றி சரியான விளக்கம் பெற :

http://al-islam.org/faq

# 5. ஸஹீ அல் புஹாரியில் ஷியா அறிவிப்பாளர்கள்

**அல்லாவின் பெயரால்**

**நம்பிக்கைக் கொண்டோரே! நீங்கள் உண்மையாளர்களுடன்**

**ஆகிவிடுங்கள். குர்ஆன் (அத் தவ்பா) 9:119**

## ரா:ஃபிதி (எதிர்ப்பாளர்கள்)

## ஸஹீ அல் புஹாரியில் ஷியா அறிவிப்பாளர்கள்

இவர்கள் நம்பத்தகுந்தவர்கள், மற்றும் உண்மையாளர்கள் என்று பலராலும் கருதப்பட்ட ஆரம்பக் கால இஸ்லாமிய அறிஞர்கள், ஷியாவின் பார்வை நோக்கில் கருத்தைப் பின்பற்றினார்கள். இறைத்தூதர் (ஸல்) அவர்களை பற்றிய இவர்களின் ஹதீஸூகள் பிரபலமான சுன்னி அறிஞர்களால் நம்பத்தகுந்ததாயிருந்தது.

ஸஹீயின் படி அல் புஹாரியின் நம்பிக்கைக் குரிய சில ஷியா அறிஞர்களின் பெயர்கள் கீழே பட்டியலிடப்பட்டிருக்கிறது. இவர்களை சேர்த்துக் கொண்டால் இன்னும் ஸஹீ முஸ்லீம், மற்றும் இதர நான்கு ஷியா சிட்டாகளிலிருந்து ஷியாவை விசுவாசித்து பின்பற்றுகிற (RAFID)
அறிவிப்பாளர்களையும் சேர்த்தால் இதன் எண்ணிக்கை கணிசமாக உயரும் இடத்தை மிச்சப்படுத்த வேண்டுமாதலால் ஒவ்வொரு நபரின் ஒவ்வொரு ஹதீஸூம் ஒவ்வொரு புத்தகத்தின் படி பகுதியாக தலைப்புடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதமுள்ளவர்கள் காட்டப்பட்டுள்ள குறீயீடுகளை வைத்து காணலாம். அல்லாது ஹதீஸ் மென்பொருள் (HADITH SOFTWARE) மூலமாகவும்,

பின்வருபவர்களின் வரலாற்றின் செய்திலிருந்து இந்த ரா:ஃபிதி என்ற வார்த்தையின் பதத்தை பயன்படுத்தப்பட்டுள்ள விதத்தை வாசகர்கள் ஒவ்வொருவரும் சரியான முறையில் கவனிக்கலாம்.

### 1. உபய்துல்லாஹ் பி முஸால் - அப்ஸி
### இறப்பு - 213 ஹிஜ்ரி

அபுதாவூத் கூறுகிறார். “இவர் தீவிர ஷியாயிசத்திற்குள்ளானவர் இவருடைய ஹதீஸ்கள் அனுமதிக்கப்பட்டது.” இப்னு மன்தஹ கூறுகிறார். “அஹ்மத் இப்னு ஹன்பல் குறிப்பிடுகிறார், உபைத்துல்லாஹ் ரா:ஃபிதியாக (அலியையே முற்றிலும் சார்ந்திருப்பது) மக்களால் நன்கு அறியப்பட்டவர் மற்றும் “மூஆவியா” என்ற பெயருள்ள எவரையும் தன்னுடைய வீட்டில் கூட அனுமதிக்கமாட்டார்.

[ ஹதீஸ் இமாம் புகாரியின் சமய நம்பிக்கை மற்றும் இவரால் எழுதப்பட்ட சிறந்த மார்க்க அறிஞர்கள் (ஸலஃபி பப்பளிக்கேஷன், U.K 1997. ) பக்கம் 89 அல்தஹஹபி ஸியர் அல் நுபலா-பகுதி9, பக்கம் 553 - 557 ]

இறை நம்பிக்கையுள்ள ஷியா அறிஞர்களில் இவரும் ஒருவர். இவர் நம்பத்தகுந்தவர் என்று யஹ்ய.பி.மய்ன் என்பரால் கருதப்பட்டார்.

அபு ஹதிம் கூறுகிறார்:  இவர் உண்மையுள்ளவரும் நம்பத்தகுந்தவருமாவார். அல் ஹிஜ்லி கூறுகிறார்.  இவர் குர்ஆனின் அத்தாட்சியானவர்.
[ அல் தஹஹபி தத்ஹ்கிரத் அல் -ஹூஃபர் கீழ் உபைய்துல்லாஹ் பி.முஸா.அல்.
அப்ஸி ஸஹீ புஹாரி [ கிதாப் அல் இமாம் ] ஸஹீ முஸ்லீம்
[ கிதாப் அல் இமாம் ] ஸஹீ அல் திர்மித் [ கிதாப் அல் சலாத் ] சுனன் அல் நசய் [ கிதாப் அல் ஷா ] சுனன் அபு தாவுத் [ கிதாப் அல் தஹராஹ் ] சுனன் இப்னு மாஜா [ கிதாப் அல் முக்கத்தமஹ் ]

## 2. அப்பாத் பி யாஃகூப் அல் - ரவஜினி
## [ இறப்பு ஹிஜ்ரி 250 ]

- ★ இவர் நம்பதகுந்த ராஃபிதி [அலியை சார்ந்தவர்கள் ] இவருடைய ஹதீஸ் ஸஹீ அல் புஹாரில் உள்ளது.
  [ இப்னு ஹாஜர் அல் அஸ்கலனி தாரிக் அல் தஹ்தீஹ்ப் கீழ் அப்பத் பி யாஃகூப் அல் - ராவஜ்னி ]
- ★ அபு ஹதிம் கூறுகிறார் : இவர் நம்பதகுந்த ஷய்க இப்னு ஆதி கூறுகிறார். இவர் ஸஃபியை கண்டிக்கிறவராய் இருந்தார். இவருக்குள்ளும் அதிகப்படியான ஷியாயிஸம் காணப்பட்டது.  ஸாலிஹ் பி முஹம்மது கூறுகிறார்.  இவர் உதுமானை கண்டிக்கிறவராய் இருந்தார்.  நான் அவரிடத்தில் ஒன்று  சொல்லக் கேட்டேன்.  தல்ஹஹ் மற்றும் அல் ஜூபேர் இவர்கள் அலியை எதிர்த்து போராடியப் பின்னர் அலியை விசுவாசித்தால் [RAFIDI] இவர்களை சொர்க்கத்தில் அனுமதித்த அல்லாஹ் மேலானவன். இப்னு ஹிப்பன் கூறுகிறார்.  இவர் ராஃபிதி [ அலிக்கு விசுவாசமானவர்] அனைவரையும் அழைத்தார்.  [ இவரைப் போல நம்பிக்கைக் கொள்ள] இவர் இந்த ஹதீஸை எழுதியவர்.  நீங்கள் மூஆவியாவை எனது மேடையில் கண்டால் அவனை கொல்லுங்கள்.
  [ இப்னு ஹஜர் அல்-ஹஸ்கலனி தஹ்திஹ்ப் அல் தஹ்திஹ்ப் கீழ் அப்பாத் பி யாஃகூப் அல் ரவஜனி ]

  ஸஹீ புஹாரி [ கிதாப் அல் தவ்ஹீத்]
  ஸஹீ அல் தீர்மிதி [ கிதாப் அல் மனகிப்]
  சுனன் இப்னு மாஜா [ கிதாப் மாஜா ஃபி அல்-ஜனய்ஸ்]

## 3. அப்து-அல்-மாலிக் பி அயன் அல்-குஃபி

- ★ மக்களின் ஒட்டுமொத்த கருத்து இவர் ராஃபிதி ஷியீ
  [ அபு ஜாஃபர் அல் யுகய்லி, துவாஃப அல்யுகய்லி கீழ் அப்துல் மாலிக் பி அயன் ]
- ★ இவர் நம்பத்தகுந்த ராஃபிதி [ஸதுக்] அல் மிஸ்ஸி தஹ்திஹ்ப் அல் கமால் கீழ் அப்துல் மாலிக் பி அயன் ]

★ அல் ஹிஜ்லி கூறிகிறார் : இவர் குஃபாவிடத்திலிருந்து வந்தவர். இவர் ஒரு தபேய் [ வாரிசு] நம்பத்தகுந்தவர் சுஃபியான் கூறுகிறார்.
" அப்துல் மாலிக் பி அய்ன் எங்களுக்கு அறிவித்தது. எங்களுக்கு அவர் ரிஃபாதி ஆவார். அவர் கருத்துக் கூறும் மனிதர்
[ கருத்துகளுக்கு மனிதர்] ஹமித் கூறுகிறார், மூன்று சகோதர்களாகிய, அப்துல் மாலிக் ஸூரராஹ் மற்றும் ஹம்ரான் இவர்கள் ராஃதிகளே!
அபு ஹதிம் கூறுகிறார் : " ஆரம்பக் காலத்தில் ஷியாயிஸத்தை தழுவியவர்களில் இவரும் ஒருவர். இவர் உண்மையிலும் நல்ல பாரம்பரிய பழக்கவழக்கங்களின் நிலையில் இருந்தார். இவைகள் எல்லாம் எழுதப்பட்டது.
[ இப்னு ஹாஜர்-அல்-அஸ்கலனி தஹ்திஹ்ப், கீழ் அப்துல் மாலிக் பி அயன்]

ஸஹீ அல் புஹாரி [கிதாப் அல் தவ்ஹீத்]
ஸஹீ முஸ்லீம் [கிதாப் அல் இமான்]
ஸஹீ அல்-திர்மிதி [ கிதாப் தப்ஸீர் அல்-குர்ஆன் ]
சுனன் அல் நஸாயி [கிதாப் அல் இமான் வ அல் நுதுர்]
சுனன் அபுதாவுத் [கிதாப் அல் பையு]
சுனன் இப்னு மாஜா [கிதாப் அல் ஜகாஹ்]

## 4. அப்துல்-ராஸாக் அல் ஸனனி [இறப்பு 211 ஹிஜ்ரி]

★ இப்னு அதி கூறுகிறார் : அவர்கள் [உதாரணமாக அறிஞர்கள்] எந்த பிரச்சினைகளையும் இந்த ஹதீஸில் காணவில்லை. இவரின் ஷியாயிஸத்தின் கடின முயற்சியைத் தவிர இவர் மரியாதைக்குச் சிறந்தவர். அஹ்ல் அல் பைத் என்று சொல்லப்படும் இறைத்தூதரின் குடும்பத்தின் பாரம்பரியத்தை பற்றி போற்றி மற்றும் மற்றவர்களால் இகழப்பட்டதையும் இவர் விவரித்து எழுதியிருக்கிறார்.
முக்ஹ்லித் அல்-ரஸ்ஸாக் கூறிகிறார் : "நான் அப்துல் ரஸ்ஸாக் அவரிடம் இருந்தபோது யாராவது மூஆவியா என்று உச்சரித்தால், அப்துல் ரஸ்ஸாக் சொல்லுவார் அபு சுஃபியான் பரம்பரையை சொல்லி உங்களில் யாரும் இக் கூட்டத்தை மாசுபடுத்த வேண்டாம்," என்று [ அல் மிஸ்ஸி, தஹ்திஹ்ப் அல்-கமால் கீழ் அப்துல் ரஸ்ஸாக் அல் ஸனனி]
★ இப்னு ஆதி விவரிக்கிறார் [ ஹதீஸில் ] அப்துல் ரஸ்ஸாக்கிடமிருந்து " என்னுடைய மேடைகளில் மூஆவியாவை கண்டால் அவரைக் கொல்லுங்கள்"
[ அல் தஹஹபி மிஸன் அல் டைடில் கீழ் ரஸ்ஸாக் அல் ஸனனி ]

ஸஹீ புஹாரி [கிதாப் அல் இமான்]
ஸஹீ முஸ்லீம் [கிதாப் அல் இமான்]
ஸஹீ அல் திர்மிதி [கிதாப் அல் தஹஅரஹ்]
சுனன் நஸாயி [ கிதாப் அல் தஹ்கிரஹ்]
சுனன் அபுதாவுத் [கிதாப் அல் தஹஅரஹ்]
சுனன் இப்னு மாஜா [கிதாப் அல் முக்அத்தமஹ்ஃபி அல் இமான்]

5. அவ்ஃப் அபி ஜமிலாஹ்-அல் அரபி [இறப்பு ஹிஜ்ரி 146]

- ★ இவர் ராஃபிதி ஆனால் நம்பிக்கைக்குரியவர். இவர் ஷியாயிஸம் இல் இருந்தபோதே அநேக இஸ்லாமிய அறிஞர்களால் நம்பத்தகுந்தவரானார். [ அல் தஹஹபி ஸியர் ஆலம்-அல் நுபாலா கீழ் அவ்ஃப்பி ஜமிலாஹ் ]
- ★ அவ்ஃப் இவர் ஒரு கதாரி, ஒரு ஷீய்யீ, ஒரு ஷேய்டேன் [அபு ஜாஃபர் அல் யுகேய்லி துவாஃப அல் யுகேய்லி கீழ் அவ்ஃப் அபி ஜமிலாஹ் ]
- ★ இவர் ஷியாயிஸத்தை நோக்கியே சாய்த்திருந்தார். இப்னு மைய்ன் கூறுகிறார் : “ நம்பத்தகுந்தவர் “ அல் நஸாயி கூறுகிறார் “ அதிக நம்பிக்கை குறியவர்”

ஸஹீ புஹாரி [கிதாப் அல் இமான்]
ஸஹீ முஸ்லீம் [கிதாப் அல் மஸ்ஜித் வ மவதி அல் ஸலாத்]
ஸஹீ அல் திர்மிதி [கிதாப் அல் ஸலாத்]
சுனன் நஸாயி [ கிதாப் அல் தஹ்அரஹ்]
சுனன் அபுதாவுத் [கிதாப் அல் ஸலாத்]
சுனன் இப்னு மாஜா [கிதாப் அல் ஸலாத் ]

கேள்வி : ஆனால், அல் புஹாரி, முஸ்லீம் இன்னும் மற்றவர்கள் இவர்களின் உண்மையான விசுவாசத்தை அறியாமல் நம்பிக்கைக் கொண்டிருக்கலாமா?

இந்த அறிஞர்கள் பாரம்பரியத்தைக் கொண்டுச் செல்வதிலும் பாரம்பரியத்தை வழிவழியாய் கொண்டு சென்றவர்களின் வாழ்க்கையை பற்றி படிப்பதுமே இவர்களின் சம்பாத்தியமாக தங்களின் வாழ்க்கையை அர்பணித்து கொண்டிருந்தினர். ரிஜால் [விவரிப்பாளர்களின் நம்பத் தன்மையை ஆராயும் விஞ்ஞானம் ] அதிகபடியானவர்கள் தங்களின் வரவாக இப்புத்தகத்தை வைத்திருக்கிறார்கள். அவர்களின் தேர்ந்தெடுக்கும் முறை, அதிகாரப்பூர்வத் தேர்வு மற்றும் பொருள்கள் [கருத்துகள்] ஒரு உறுதியான சுன்னி நிலைப்பாடைக் கொண்டிருக்கிறது. இருப்பினும், உண்மையாளர்கள் என்று ஆராந்த ஷியாக்கள் மீது தங்களை தாங்களே நம்பிக்கைக் கொண்டிருக்கிறார்கள். இது உண்மைதான் அவர்களின் ஷியாயிஸம் மறுப்புடன் தான் வெளிப்படுத்தப்படுகிறது. ஷியா அறிவிப்பாளர்களின் நம்பிக்கையை அல் புஹாரி, முஸ்லீம் இன்னும் மற்றவர்கள் உண்மையாகவே அறியவில்லை. இதனால் இவர்களுக்கு சொல்லபடுவது இவர்கள் அவர்களில் [ஷியா] தகுதியற்றவர்களை அழைக்க வேண்டும்.

கேள்வி : ஆனால், அவர்கள் ஏன் அதிகாரியாக சுன்னிகளின் மேல் நம்பிக்கைக் கொள்ளவில்லை?

ஒருவேளை, இவர்கள் மதவெறி மற்றும் குறுகிய மனப்பான்மை கொண்டவர்களாகவும் இன்னும் அனைத்து குற்றசாட்டுகளும் ஷியாக்களின் நம்பிக்கைக்கு தொடர்புக்குட்படுத்தும், சுன்னி சகோதரர்களைப் போல இவர்கள்

இல்லை.  மறுக்க முடியாத சரித்திர ஆதாரங்களின் மூலமாக சில கலீஃபாக்கள் மற்றும் ஸஹாபாக்களின் நெருக்கடியான நிலைமைகள் தெளிவாக பட்டியலிடப்பட்டிருக்கிறது.  இவைகள் முன்சென்ற சுன்னி அறிஞர்களின் சந்ததிகளால் பொறுத்துக் கொள்ளப்பட்டது.

கேள்வி : மற்றும் ஷியாக்கள் சுன்னி அறிஞர்களின் மேல் அவர்களது புத்தகங்களில் நம்பிக்கைக் கொள்கிறார்களா?
வெகுகாலமாகவே, சுன்னி அறிவிப்பாளர்கள், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் அஹ்ல் அல் பைத்தை குறித்து இவர்களுக்கு எதிரியாக இல்லை.  அவர்கள் ஷியா பரம்பரையாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள்.

முடிவு: ஷியா அறிவிப்பாளர்களால் கொண்டுவரப்படும் செய்தி கருத்துகள் நிராகரிக்கப்படுமென்றால், குறிப்பிட்டு முக்கியமானதாக கருதப்பட்ட ) சொல்லப்பட்ட சுன்னி ஹதீஸ் இலக்கிய பகுதிகள் உண்மையில் காணாமல் போகும்.  சுன்னி அறிஞர்களின் பார்வைக்கு ஷியாவின் விசுவாசம் (RAFIDI) அடுத்தடுத்து வரும் சிறந்த சாட்சியாக தொடர்கிறது.

இஸ்லாமை பற்றி ஆதாரப் பூர்வமாக அறிந்து கொள்ள

**http://al-islam.org/faq/**

## 6. அனைத்து கூட்டாளிகளும் நம்பத்தகுந்தவர்கள், மற்றும் உண்மையாளர்கள்

**அல்லாஹ்வின் பெயரால்**

**நம்பிக்கையாளர்களே! தீயவன் எவனும் உங்களிடம் ஒரு செய்தியைக் கொண்டுவந்தால், அதைத் தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள்; (இல்லையேல்) அறியாமையினால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்துவிடலாம்; பின்னர் நீங்கள் செய்தவைப்பற்றி நீங்கள் கைசேதப்படுபவர்களாக ஆவீர்கள். குர்ஆன் (அல்ஹுஜுராத்) 49:6**

### சஹாபாக்கள் அனைவருமே உண்மையும் நம்பகமானவர்களா?

இறைத்தூதர் வாழும் காலத்திலும் மற்றும் அவரது இறப்புக்கு பின்னும், அவருடைய சஹாபாக்கள் யாரெல்லாம் இறைத்தூதரின் (ஸல்) போதனைகளின் மேல் மாறாக் கருத்தோடும் உறுதியான நிலைபாடும் கொண்டிருந்தார்களோ, இப்படிப்பட்டவர்களை ஷியாக்கள் விசுவாசித்தார்கள். சுன்னி மூஸ்லீம் அறிஞர்களின் பார்வையின்படி சில நொடிகள் மட்டுமே இறைத்தூதரைக் கண்டவர்கள் கூட சஹாபாக்களாகக் கருதப்பட்டதுமல்லாமல் மற்றவர்களின் விமர்சனத்திற்கு எதிரானவர்களாக மதிக்கப்பட்டார்கள். இச்செயலை குர்ஆன் மற்றும் சரித்திர உண்மைகள் ஆதரிக்கவில்லை. இரண்டு வெவ்வேறு சிந்தனைகளுக்கு வழிவகுத்தது.

### சஹாபாவின் வெளிப்படையான தகவல்:

இப்னு ஹாஜர் அஸ்கலனி பிரபல சுன்னி அறிஞர் இறைத்தூதரின் (ஸல்) சஹாபாக்களின் தெளிவான நிலமையை விவரிக்கிறார். இறைத்தூதர்(ஸல்) அவர்களை சந்தித்தப் பின் இஸ்லாமை ஏற்றுக் கொண்டு இறக்கும் வரை முஸ்லீமாகவே வாழ்ந்தவரை பற்றி பின்வருமாறு கூறுகிறார்.

- ★ உண்மை நிலையென்னவென்றால், யாரெல்லாம் இறைத்தூதர்(ஸல்) சந்தித்தார்களோ, அது நீண்ட காலமாகவே குறுகிய காலமாகவோ இருக்கிறது.
- ★ இறைத்தூதரின்(ஸல்) பாரம்பரிய தகவல்களை மக்களிடம் எடுத்துச் சென்றவர்கள் மற்றும் செல்லாதவர்கள்.
- ★ இறைத்தூதர்(ஸல்) அவர்களோடே இணைந்து போராடியவர்கள் மற்றும் போராடாதவர்கள்.
- ★ இறைத்தூதர்(ஸல்) அவர்களோடே சேர்ந்து உட்கார்ந்து பேசிக்கொள்ளாமல், வெறுமனே அவரைப் பார்த்துவிட்டுச் சென்றவர்கள்.
- ★ அதேசமயம் தாங்கள் குருடர்களாய் (நிராகரிப்பவர்களாய்) இருக்கிறதற்காக இறைத்தூதர் அவரகளிடம் மன்னிப்புக் கேட்க்கும்படியாக அவரகளில் யாரும் அவரைப் பார்க்கவில்லை.

இப்னு ஹாஜர் அல்-அஸ்கலனி, அல் ஸபாஹ் ஃபிதம்இஸ் அல் சஹாபா (பெய்ரூட்) பகுதி 1, பக்கம் 10.

## சஹாபாககள் அனைவரும் உண்மையும் நம்பகமானவர்களா?

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் சஹாபாக்கள் உண்மையும் நம்பகமானவர்கள் மற்றும் உம்மத்தில் சிறந்தவர்கள் என்ற செய்தியில் அஹ்-அல், சுன்னா ஏகமனதாக உள்ளது. அதிகபடியான சுன்னி அறிஞர்கள் தங்கள் நம்பிக்கைகளை குறிப்பிட்டுள்ளார்கள்.

- ★ இப்னு ஹாஜர் அல்-அஸ்கலனி அல் ஸபாஹ் ஃபி தம்இஸ் அல் ஸஹாபா (கெய்ரோ) பகுதி 1, பக்கம் 17-22.
- ★ இப்னு அபி ஹதிம் அல்-ரஸி அல் ஃபர்க் வ அல் ததித் (ஹைதராபாத்) பகுதி 1, பக்கம் 7-9
- ★ இப்னு அல்- அதிர் உஸ்து அல் கஹபா ஃபி மாரிஃபத் அல் ஸஹாபா பகுதி1 பக்கம் 2-3

இந்த முரண்பாட்டிற்கு மறுக்கமுடியாத ஆதாரங்களிலும், இந்த கருத்தை ஏற்றுகொள்வதற்கு கடினம் கீழ்காணும் உதாரணத்தை கருத்தில் கொள்க.

அஸ்-ஸூபேர் கூறினார்கள், விவசாயத்திற்கு பயன்படும் நீரோடையைக் குறித்து எனக்கும் அன்சாரிதோழர் ஒருவருக்கும் சண்டை ஏற்பட்டது. அந்த அன்சாரி அல்லாஹ்வின் தூதருடன் பத்ரு போரில் கலந்துக் கொண்டவர். எங்களிடையே ஏற்பட்ட பிரச்சனையின் நிமித்தமாக அல்லாஹ்வின் தூதர் அஸ் ஸூபேரிடம் கூறினார்கள், ஸூபேரே! உம்முடைய தோட்டத்திற்கு நீ நீர்பாய்ச்சிவிட்டு பிறகு உனக்கடுத்தவரிடத்திற்கு நீரை போகவிட்டுவிடும், என்று கூறினார்கள். இதை கேட்ட அந்த அன்சாரிக்கு கோபம் வந்துவிட்டது. அவர் கேட்டார் “அல்லாஹ்வின் தூதரே! அவர் உம்முடையை உறவினர் என்பதினாலேயா”? என்று இந்த சிக்கலின் நிமித்தமாக அல்லாஹ்வின் தூதர் மாற்றி கூறினார்கள். “ஸூபேரே நீ நீர்பாய்ச்சும் போது அது சுற்றியுள்ள எல்லா பகுதிக்கும் போகும் மட்டும் விட்டுவிடுவீராக என்று கூறினார்கள். இதை பார்க்கையில் அஸ்ஸூபேருக்கு அல்லாவின் தூதர் முழுமையான உரிமையை வழங்கிருந்தார். அஸ் ஸூபேருக்கும் அன்சாரி தோழருக்கும், பெருந்தன்மையுள்ள பயணளிக்ககூடிய தீர்ப்பு வழங்குவதற்கு முன்பே அன்சாரி எரிச்சலடைந்த நிலையிலும், சட்டத்தின் ஆதாரத்தோடே அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அஸ்ஸுபேருக்கு முழு உரிமையை வழங்கினார். அஸ்ஸுபேர் கூறினார், இந்த வழக்கு தொடர்பாகத்தான் கீழ்கண்ட வசனத்தை அல்லாஹ் இறக்கினான் என்று நினைக்கிறேன் என்றார்.

குர்ஆன்(அன்னிஸா)4:65 உன் இறைவன் மீது சத்தியமாக அவர்கள் தங்களிடையே எழுந்த சச்சரவுகளில் உம்மை நீதிபதியாக ஏற்று., பின்னர் நீர் தீர்ப்பு செய்தது பற்றி எத்தைகைய அதிருப்தியையும் தம் மனங்களில் கொள்ளாது முற்றிலும் ஏற்றுக் கொள்ளாத வரையில் அவர்கள் நம்பிக்கைக் கொண்டவர்களாக மாட்டார்கள்.

[ஸஹூ அல் புஹாரி (ஆங்கில மொழிபெயர்ப்பு) பகுதி 3 புத்தகம் 49 எண்-871]

சுன்னியின் கோட்பாட்டின் படி, இறைத்தூரின்(ஸல்) இந்த ஸஹாபா செயல் அங்கீகரிக்கப்பட்ட சுன்னாஹ்வின் நிந்தனைக்கு அப்பால் இருக்கும் மற்றும் இவருடைய இந்தச் செயல் பின்பற்றுவதற்கு உதாரணமாக இருக்கும். உண்மையென்னவெனில் இந்த சஹாபா இறைத்தூதரின் தீர்ப்பை மட்டும் மறுத்தது மட்டுமில்லாமல், குர்ஆனின் அந்த வசனம் இறக்கப்பட்ட போது அது அவருக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியது.

அவர்களின் (சுன்னி) எதிர்பாரதவிதமாக, இது போன்ற நபர்களின் உதாரணங்களை இஸ்லாமிய சரித்திரம் நிறைவாய் தந்திருக்கிறது. அதாவது இஸ்லாமிய வழி இல்லாத சுன்னி அடிப்படையில் இருக்கும் ஹாபாக்களைப் பற்றி இவர்களுடைய நடத்தைகள் பார்வைக்காவே இருந்தது. அதாவது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் வாழுங்காலத்திலும் அதற்கு பின்னும் கூட.

## அல் வலித் பின் உக்பாஹ்

குர்ஆன் -அஸ்ஸஜ்தா (32:18) நம்பிக்கைக் கொண்டோர். குற்றம் செய்தவரைப் போல ஆவாரா? அவரகள் (இருவரும்) சமமாகமாட்டாரகள்.

ஒரு சம்பவத்தைப்பற்றி இறக்கப்பட்ட குறிப்பிட்ட வசனத்தின் சொற்றொடரில் அமைந்துள்ள நம்பிக்கைக் கொண்டோர் என்ற வார்த்தை அலி பின் அபிதாலிப்பையும் மற்றும் மறுப்பாளர்கள் (ஃபாஸிக்) என்ற வார்த்தை இறைத்தூதரின் சஹாபா என்று சொல்லப்படும். அல் -வ அலைத் பின் உக்பா பின் அபி முயத் தையும் குறிப்பிடுகிறது என்று முன்னனி சுன்னி அறிஞர்கள் நமக்கு சொல்லுகிறார்கள்.

- ★ அல்-குர்துபி, தப்ஸீர் (கெய்ரோ, 1947) பகுதி 14, பக்கம் 105.
- ★ அல்-தபரி, தப்ஸீர் ஜமி அல் பயான், அந்த ஆயத்தின் வர்ணனையின் கீழ்.
- ★ அல்-வஹதி, அஸ்பப் அல்-நுசுல் (துர் அல்-தியான் லி துரத் பதிப்பு) பக்கம் 291.

மறுப்பாளர்களின் (ஃபாஸிக்) செய்தி தொடர்பினை கண்மூடித்தனமாக நம்பிக்கைக் கொள்ளும் விசுவாசிகளை மேற்கண்ட வசனத்தின்படி குர்ஆன் அவர்களை தடைசெய்கிறது என்பதை ஏற்கனவே நாம் பார்த்தோம்.

குர்ஆன் அல் ஹுஜுராத் (49:6) நம்பிக்கையாளர்களே! தீயவன் எவனும் உங்களிடத்தில் ஒரு செய்தியைக் கொண்டு வந்தால், அதை தீர்க்க விசாரித்துக் கொள்ளுங்கள் (இல்லையேல்) அறியாமையினால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தாருக்கு நீங்கள் தீங்கு செய்து விடலாம், பின்னர் நீங்கள் செய்தவைப்பற்றி நீங்கள் கைசேதப்படுவர்களாக (கவலைப்படுபவர்களாக) ஆவீர்கள்.

சுவாரஸ்யமாக குறிப்பிடபடுகிறா விஷயம் இந்த வசனத்தில் என்னவென்றால் வேறொரு சம்பவத்தையும் குறிப்பிட்டுக் காட்டுகிறது. அல் வாலித்தை போல இறக்கப்பட்ட வசனத்தை பொய்யுரைத்து கொண்டு செல்கிறவரை இவ்வசனம் மறுப்பாளர் (ஃபாஸிக்) என்று அறிவிப்பு செய்கிறது.

- ★ இப்னு கதிர், தப்ஸீர் சுரன் அல் அஸ்ஸிம் (பெய்ரூட், 1987) பகுதி 4 பக்கம் 224.
- ★ அல்-குர்துபி, தப்ஸீர் (கெய்ரோ, 1947) பகுதி 16, பக்கம் 311.
- ★ அல் சுயடி மற்றும் அல் மஹல்லி, தப்ஸீர் அல் ஃபல்அலயன் (கெய்ரோ 1924) பகுதி 1, பக்கம் 185.
- ★ அபு அமீனாஹ் பிலால் பிலிப்ஸ் தப்ஸீர் சூரா அல் ஹுஜுராத் (ரியாத்) பக்கம் 62-63.

அபு ஆமினாஹ் பிலால் கூறுகையில், சந்தேகத்திற்கிடமான தன்மை கொண்ட, அதாவது யாருடைய நம்பகத்தன்மை இன்னும் நீரூபிக்கப்படவில்லையோ, மற்றும் பாவி என்று அறியப்பட்டவர், இப்படிப்பட்ட மக்களால் வழங்கப்பட்ட தகவலை கையாளும் போது, பெரும் எச்சரிக்கை எடுக்கப்பட வேண்டும் என்கிறார்.

எனினும் அல்- வாலித்தின் ஆதார பூர்வமான சுன்னி ஹதீஸ்களின் சேர்க்கையில் இறைத்தூதரின் பாரம்பரியம் சொல்லப்பட்டிருப்பதை நாம் காணலாம். கீழே சில உதாரணம்.

- ★ அபு தாவூத் சுனன் (1973) கிதாப் அல்- தரஜ்ஜுல், பப்ஃபி குஹுலக் லி அர்-ரிஜால், பகுதி4 பக்கம் 404. ஹதீஸ் எண் 4181
- ★ அஹமத் பின் ஹன்பல் அல் முஸ்னத், அவ்வல் முஸ்னத் அல்-மதினியின் ஹஜ்மா இன் ஹதீஸ் 15784.

அல் வாலித்தின் தந்திரங்கள் இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தோடே முடியவில்லை. அவர் மூன்றாவது கலீஃபாவான உதுமானால் அல்-குஃபாஹ்விற்கு கவர்னரானப் பின்னும் தொடர்ந்தது. ஒருமுறை அவர் போதயில் இரண்டு ரக்காத் தொழவேண்டிய பஜர் தொழுகையை நான்கு ரக்காத்தாக தொழுகை நடத்தினார். அதனால் அடுத்தடுத்து உதுமானின் கட்டளையின்படி தண்டனையும் அடைந்தார். இந்தச் சம்பவம்.....அதிகபடியானவற்றில் இடம் பெற்றிருக்கிறது. சில கீழே கூறப்பட்டுள்ளது.

- ★ ஸஹீ-அல் புஹாரி (ஆங்கில மொழிபெயர்ப்பு) பகுதி-5 புத்தகம் 57, எண்-45, பகுதி-5, புத்தகம் 58, எண்-212.

- ★ அல்-தபரி, தாரிக் (ஆங்கில மொழிப் பெயர்ப்பு) அல் தபரின் வரலாறு ஆரம்பக்கால கலீபாக்களின் நெருக்கடிகள் பகுதி-5, பக்கம் 120

தந்திரத்தின் (ஃபாஸிக்) முன்னோடிகளான அல் - வாலித் என்னும் தோழமையின் பின்னால் நின்று தொழுகிறவர்கள் முதல் பாவியாக சுன்னி சட்ட நிபுணர்கள் துல்லியமாக சட்டமாக்கியுள்ளனர்.

- ★ அலி-அல், கர்ரி அல்-ஹனஃபி, ஷரஹ் ஃபிக் அலி அக்பர் அனுமதிக்கப்பட்ட நல்லவர் பின்னால் நின்று தொழுவதும் அல்லது தந்திரமுள்ளவர் பின்னால் நின்று தொழுவதும் என்ற அத்தியாத்தின் கீழ் பக்கம்90.
- ★ இப்னு தைமிய்யா மஜ்னு ஃபத்துவா (ரியாத் 381) பகுதி 3 பக்கம் 28.

## ஆனால் கடந்த சச்சரவுகளை மறப்பதும், மன்னிப்பதும் ஏன் இல்லை?

அல் வலித் போன்ற தோழர்களின் தவறாய் மறைக்கவில்லையென்றால், அவரைப் பற்றி வெறித்தனமான புறங்கூறுதலுக்கு காரணமாயிருக்காது. மாறாக அதன் காரணம், இஸ்லாம் குறித்த அதன் கொள்கைகளையும், இறைத்தூதர்(ஸல்) அவர்களின் சுன்னாவையும் எங்கிருந்து பெறுகிறார்கள் என்பதில் முஸ்லீம்கள் ஜாக்கிரதையாக இருப்பது அவசியம் என்பதே. இறைத்தூதர்(ஸல்) அவர்களின் சஹாபாக்கள், அவர்களின் சொந்த விருப்பத்திற்கு மற்றும் அவர்களின் மனநிலை, மற்றும் அவர்களின் நம்பகத் தன்மைக்கு மட்டும் விடாமல், அவர்களின் வாழ்க்கை மீது அதிகம் கவனம் செலுத்துவதினால் மட்டுமே அவர்களின் சொற்களை உறுதிப்படுத்த முடியும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, இறைத்தூதர்(ஸல்) அவர்கள் நம்மை ஏற்கனவே எச்சரித்தும் இருக்கிறார்.

- ★ இறைத்தூதர் கூறினார்கள், “ நான் உங்களுக்கு முன்னல் ஓர் தண்ணீர் தடாகத்தை அடைவேன். என்னை முழுமையாய் பின்பற்றியவர்கள் என்னோடே சேர்ந்து அதில் குடிப்பார்கள். யாரெல்லாம் அதில் குடித்தார்களோ! அவர்களுக்கு ஒரு காலும் தாகம் ஏற்படாது. ஒரு கூட்ட மக்கள் வருவார்கள். எனக்கு அவர்களைத் தெரியும் அவர்களும் என்னை அறிந்தவர்கள் தாம், ஆனால் நாங்கள் வெவ்வேறாக பிரிக்கப்படுவோம். நான் கேட்பேன் “ இவர்கள் என் தோழர்கள் என்று உமக்கு பின்னால் இவர்கள் என் செய்தார்கள் என்று உனக்குத் தெரியாது என்று பதில் வரும். நான் சொல்லுவேன் “ என்னை பின் தொடர்ந்து உண்மையாய் வந்தவர்களிடமிருந்து நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் என்று

  [ஹஹூ அல் புஹாரி (ஆங்கில மொழிபெயர்ப்பு) பகுதி-8 புத்தகம் 76 எண் 585]

**சஹாபாக்களின் மீது ஷியாவின் கருத்து:**

எப்படிப்பட்டவர்களை குர்ஆன் மேன்மை படுத்தியிருக்கிறதோ அந்த உண்மையான சஹாபாக்களை ஷியா நேசிக்கிறது. தனிப்பட்டவர் மற்றும் அல் வலித் பின் உக்பாவை போன்று சுன்னி தோழமையின் அடிப்படையில் முரணாகவே சந்தித்துக் கொண்டவர் இந்த மேன்மை அடைய மாட்டார். இவர்களை நம்பத்தகுந்த சுன்னாவை பற்றிய செய்தி தொடர்பாளர்களாகவும் சிறந்த முன் உதாரணமாகவும் ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் உலகம் முழுவதும் அறியப்படும் பொதுவான நாணயத்தைக் கொண்டு ஷியாக்கள் சஹாபாக்களை நம்புவதில்லை. ஒவ்வொரு சஹாபக்களின் வரலாற்றை ஆய்வு செய்து அவர் அல்லது அவள் சட்ட ஒழுங்குடன் வெளிப்படும் தூதுத்துவ (இறைத்தூதருக்கு அருளப்படும்) செய்தியை பின்பற்றுகிறவரா என்பதையும் கவணிக்கிறது நிச்சயமாக, அம்மார், மிக்தத், அபுதஹர், சல்மான், ஜாபிர் மற்றும் இப்னு அப்பாஸ் போன்றவர்களுக்கு தடை சொல்லவில்லை. நான்காவது ஷியாவின் இமாம் ஸய்ன்-அல், ஆபிதீன் அவர்களின் விண்ணப்பத்தில் புகழப்பட்ட உன்னதமான சஹாபாக்கள் இந்த எஞ்சியவரகள் என்று தீர்மாணிக்கிறோம். அவர்களை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக.

இறைவா! இறைத்தூதர் அவர்களின் சஹாபாக்களில், விசேஷமாக யாரெல்லாம் சிறந்த தோழமையில், சோதனையிலும் அவருக்கு உதவியாக நிலைத்து நின்றவர், அவருடன் செய்தி ஆலோசனையில் பொறுப்புடன் இருந்தவர். இறைத்தூதரின் செய்தியை அறிவித்த காரணத்தினால் யாரெல்லாம், தன் தோழமை, பிள்ளைகளை பிரிந்தார்களோ!, மற்றும் இறைத் செய்தியை உறுதிப்படுத்துவதற்காக தந்தையுடனும், தன் மகன்களுடனும் யாரெல்லாம் போரிட்டார்களோ! யாரெல்லாம் இவரின் மூலம் வெற்றியடைந்தார்களோ! இவருடைய அன்பிற்கு இணையாக அவர்களுடைய வர்த்தகமும் ஒன்றுமில்லை என்று நம்பினார்களோ! யாரெல்லாம் தங்களின் கரங்க்களின் பிடியிலிருந்த வாரிசுகளால் கைவிடப்பட்டார்களோ! யாரெல்லாம் தங்களின் நிழல்களிலிருந்த உறவினர்களால் புறக்கணிக்கப்பட்டார்களோ! இறைவா உன்னில் உனக்காக அவர்கள் யாவற்றையும் இழந்தனர். உன்னில் உன் நிமித்தமாய் மக்களை அழைத்ததற்காக இறைத்தூதரிடம் இருக்கும்போதெல்லாம் விரட்டப்பட்ட படைப்பினங்கள் அவர்கள் உன்னுடைய திருப்தியை அவர்களுக்கு உகந்ததாய் ஆக்குவாயாக!.

[இமாம் ஸைன்-அல்-ஆபிதீன், ஸஹி:ப அல் காமிலாஹ் (ஆங்கில மொழிப்பெயர்ப்பு லண்டன் 1988) பக்கம் 27]

மேலும் ஆதாரபூர்வமான இஸ்லாமிய அறிவிற்கு

**http://al//islam.org/faq**

## 7. ஷியாக்கள் ஒரு வித்தியாசமான குர்ஆனை நம்புகிறார்களா?

**அல்லாஹ்வின் பெயரால்**

குர்ஆன்-அல்ஹிஜ்ர் **(15-9)** நிச்சயமாக நாம் தான் (நினைவூட்டும்) இவ்வேதத்தை இறக்கி வைத்தோம் நிச்சயமாக நாமே அதை பாதுகாப்போம்.

**ஷியா மாறுப்பட்ட குர்ஆனை நம்புகிறதா?**

குர்ஆனின் தஹ்ரிஃப் **(THARIF)** (புகழ்ந்துரை) மீது ஷியாக்கள் நம்பிக்கை கொள்ளாமல் தொடர்ந்து குற்றவாளிகளாகவே இருக்கிறார்கள். அதாவது தஹ்ரிஃப் (புகழ்ந்துரை); இதனால் குர்ஆன் சிதைக்கப்பட்டிருக்கிறது என்று நம்பிக்கைக் கொள்கிறார்கள் மற்றும் இறைத்தூதர் அவர்களுக்கு அருளப்பட்ட நிலையில் குர்ஆன் இல்லையென்றும் இவர்கள் நம்புகிறார்கள்.....

இது உண்மையில்லை

ஆரம்பக் காலம் முதல் இந்த நூற்றாண்டு வரை குர்ஆன் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்பதை எல்லா ஷியா அறிஞர்களும் நம்பினார்கள். ஆரம்பக்கால சில பிரபல ஷியா அறிஞர்களின் நம்பிக்கை (குர்ஆன் பாதுகாக்கப்பட்டது) தெளிவாகக் கூறப்பட்டு அவர்களின் புத்தகங்களிலும் அடங்கியுள்ளது.

- ★ ஷெய்க் அல்-சதக் **(d. 381 AH)** கிதாபுல்-இதிகதத் (தஹ்ரன், **1370**) பக்கம்**-63**
- ★ ஷெய்க் அல்-முஃபித் **(d. 413 AH)** அவேய்லுல்-மக்லத் பக்கம் **55-6**
- ★ ஷரிஃப் அல்-முர்ததா **(d. 436 AH)** பஹ்ருல் ஃபவைய்து (தஹ்ரன் **1314)** பக்கம் **69.**
- ★ ஷெய்க் அத்-துஸி **(d. 460 AH)** தஃப்ஸீர் அத்திப்யன் (நஜஃப் **1376)** பகுதி **1** பக்கம் **3**
- ★ ஷெய்க் அத் -தப்ரஸி **(d. 548)** மஜ்முல்-பையான் (லெபனான்) பகுதி **1** பக்கம் **15**

இதே கருத்தை எடுத்து வைத்த பின்னால் வந்த சில அறிஞர்களும் அடங்கும்:

- ★ முஹ்ஹமது முஹ்ஸின் அல்-ஃபைத் அல்- கஷானி (d. 1019 AH) அல்-வஃபி பகுதி1 பக்கம் 273-4 மற்றும் அஸ்ஃப ஃபி தஃப்ஸீர் அல் ஸீரன் பக்கம் 348.
- ★ முஹ்ஹமது பக்கீர் அல்-மஜ்லிஸி (d. 1111 AH) பிஹர் அல்- அன்வர் பகுதி 89, பக்கம் 75.

இந்த நம்பிக்கையானது தொடர்ந்து தற்போது வரை நீடிக்கத் தான் செய்கிறது. குர்ஆன் முழுவதும் பாதுகாக்கப்பட்டது மற்றும் மாற்றப்படவில்லை என்ற நம்பிக்கையை வலியுறுத்திக் கொண்டு இந்நூற்றாண்டு வரை ஷியா அறிஞர்கள் இருக்கிறார்கள். இவைகள் பிரபல பெயர்களாக அடங்கியிருக்கிறது. அவை சையீத் முஹ்ஸின் அல்-ஆமின் அல் அமிலி (d. 1371 AH) சையீத் ஷரஃப் அல் தின் அல்-முஸவி (d. 1377 AH) சையீத் முஹ்ஸின் அல் ஹக்கிம் (d. 1390 AH) அல்லமஹ் அல்-தபதபைய் (d. 1402 AH) சையீத் ரூஹூல்லாஹ் அல் குஹூமேய்னி (d. 1390 AH)சையீத் அபு அல்-காஸிம் அல்-குஹூய் (d. 1413 AH) மற்றும் சையீத் முஹ்ஹம்மது ரிதா அல்-குல்பேகனி (d. 1414 AH) நிச்சயமாக இது முழுமையான பட்டியல் இல்லை.

ஆனால் இந்த அறிஞர்களுக்கு முன்பாக ஷியாக்கள் எப்படியிருந்தார்கள்? அவர்கள் தஹ்ரிஃப் (Tharif)இல் நம்பிக்கை கொள்ளவில்லையா?

அப்படியில்லை, உதாரணமாக கருத்தில் கொள்ள; உபைதுல்லாஹ்.பி. முஸ-அல்-அப்ஸி (120-213 AH) உண்மை விசுவாசியான இந்த ஷியா அறிஞரின், இமாம்களின் வழிவந்த இவரது பிரபல ஹதீஸ் சேகரிப்புகள் அல்-தஹ்திஹ்ப் மற்றும் அல் தஸ்திப்ஸரில் காணலாம். இவரைப்பற்றி சில சுன்னி அறிஞர்களின் கருத்தை பார்ப்போம்.

- ★ இறையச்சமுள்ள முக்கியமான ஷியா அறிஞர்களுள் ஒருவர்........இவர் நம்பத்தகுந்தவர் என்று யஹ்யா.பி.மைய்ன் என்பவரால் கருதப்பட்டவர். அபு ஹதிம் கூறுகிறார்; இவர் உண்மையுள்ளவரும் நம்பகமானவருமாவார். அல் இஜ்லி கூறுகிறார். இவர் குர்ஆன் மேல் அதிகாரம் உள்ளவர்..

  [அல் தஹஹபி, தத்ஹ்கிரத் அல்-ஹூஃபஸ் (ஹைதராபாத் 1333 AH) பகுதி 1 பக்கம் 322]

இவர் ஷியா அறிஞர்களில் முதன்மையான இமாம் ஆவார். ஃபிஹ்க் **(fiqh)** ஹதீஸ் மற்றும் குர்ஆனை இவர் கையாளும் விதம் இவரின் பக்தியும் நீதியின் தன்மையும் காட்டுகிறது.

**[** இப்னு அல்-இமத் அல்- ஹன் பலி, ஷத்ஹரத் அல் தஹஹப் (கெய்ரோ, **1350 AH)** பகுதி **2** , பக்கம் **29.]**

இவர் மாறுபட்ட குர்ஆனை நம்புகிறவரென்றால், இவருக்கு இருக்கும் குர்ஆன் மீது உள்ள அறிவை பற்றி எந்த சுன்னி அறிஞர்களும் பாராட்டியிருக்க மாட்டார்கள் மற்றும் உபைதுல்லாஹ் ஷியாவாக இருந்த போதிலும் இவர் உண்மையுள்ளவர் என்று கருதப்பட்டார். அல் புஹாரி மற்றும் முஸ்லிம் மற்றும் இவர்களை போல அதிகமான மற்றவர்களாகிய பாரம்பரியத்தைக் (மரபு) கூறும் பிரபல சுன்னி அறிஞர்கள்; இவருடைய ஹதிஸ் சேகரிப்புகளை அதிக அளவில் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

[ஹதீஸ் அல் புகாரி இமாமின் சமயம் (ஸலஃபி பப்ளிகேஷன் **U.K. 1997)** பக்கம் **87-89]**

**கேள்வி** : **குர்ஆன் அளவில் மூன்று மடங்கு உள்ள முஸ்ஸஃப் ஃபாத்திமா வை ஷியாக்கள் நம்பவில்லையா?**

மற்ற புத்தகங்கள் குர்ஆனின் புத்தகத்திற்கு (Mushaf) அவசியமற்றது ஃபாத்திமாவின் குர்ஆன் என்பது இல்லை! இறைத்தூதரின் (ஸல்) மறைவிற்கு பிறகே! முஸ்ஸஃப் பாத்திமா என்ற புத்தகம் ஃபாத்திமாவினால் எழுதப்பட்டு வெளியிடப்பட்டது இது குர்ஆனில் ஒரு பகுதியில்லை மற்றும் அமல்படுத்துவதற்கு அல்லாஹ்வின் கட்டளைகளோ; சட்டங்களோ அதில் இல்லை.

**கேள்வி** : ஆனால் இன்றைக்கு நாம் வைத்திருக்கிற குர்ஆன் கூறும் மரபைக் காட்டிலும் அதிகமான வார்த்தைகள் ஷியாவின் ஹதீஸ்களில் (மரபைப்பற்றி கூறும்) இல்லையா?

அதிகபடியான வார்த்தைகள் குர்ஆன் விரிவுரைக்குத் தான் பயன்படுத்தபட்டிருக்கிறது. அவர்கள் நிஜமான குர்ஆனின் வார்த்தைகள் சிதைக்கப்பட்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டவில்லை.

அதற்கு சில உதாரணங்கள் இருக்கிறது. இவைகள் ஷியா மற்றும் சுன்னி இவை இரண்டின் மூலங்களிலுமே காணலாம். இரண்டு உதாரணங்களை

கருத்தில் கொள்ள வேண்டும் இரண்டுமே பிரபல சுன்னி குர்ஆன் தொகுப்பாளரிடமிருந்து வந்தவை.

★ உபை.பி.கப் குர்ஆன் வசனத்தை படிக்க பழக்கபடுத்துகிறார், “எனவே அவர்களிடமிருந்து எதை நீங்கள் (திருமணத்தின் மூலம்) இன்பம் அனுபவித்தீர்களோ (அதற்காக) அவர்களுக்குரிய மஹரை (மனக் கொடைகளை) அவர்களிடம் கட்டாயமாக கொடுத்து விடுங்கள் (குர்ஆன்- அன்னிஸா-24) இதையேதான் இப்னு அப்பாஸின் குர்ஆன் தொடர்வாசிப்பில் உள்ளது.

[ ஃபக்ஹர் அல்-தின் அல்-ரஸி மஃப்டிக் அல் கஹயுப் (பெய்ரூட் 1981) பகுதி 9 பக்கம் 53]

[இப்னு கதிர் தஃப்ஸிர் அல்-ஸிரன் அல்-அஸிம் (பெய்ரூட் 1987) பகுதி 2 பக்கம் 244.

இப்னு கதிரின் தஃப்ஸீரிலுள்ள குறிப்பேடுகளில் விவரிக்கிறார்; அதாவது கூடுதலான வார்த்தைகள் வெளிப்பட்டது. குர்ஆனின் பகுதியாக இல்லை. இவைகள் இறைத்தூதரின் சஹாபாக்களால் ஓதப்பட்ட விரிவுரையும், விளக்க உரையின் வழியிலிருந்தே!

★ இப்னு மஸ்வூத் கூறுகிறார், இறைத்தூதரின் காலத்தில் நாங்கள் கீழ்கண்ட வசனத்தை இப்படியாக ஓதுகிறவர்களாய் இருந்தோம். அது என்னவெனில் “தூதரே! உமது இறைவனிடமிருந்து உமக்கு அருளப்பட்டதை (அலி நம்பிக்கைக் கொண்டோருக்கு தலைவர் என்பதை) மக்களுக்கு எடுத்துக் கூறிவிடும். (இவ்வாறு) செய்யாவிட்டால் அவரது தூதை நீர் எடுத்துக் கூறியவராக மாட்டீர். குர்ஆன் அல் மாயிதா (5:67)

[ஜலால்-அல்-தின் அல் சுயுட்டி தருர் அல் மந்துர் பகுதி 2 பக்கம் 298]

மேற்கண்ட வசனத்தில் அடைப்புகுறியில் கூறப்பட்டுள்ள [அலி நம்பிக்கைக் கொண்டோருக்கு தலைவர் என்பதை] இந்தவரி குர்ஆனில் இல்லை. இருந்த போதிலும் சஹாபாவான இப்னு மஸ்வூத் அவர்கள் ஓதும் போது இப்படியாதான் குர்ஆனின் இவ்வசனம் இறக்கப்பட்ட தறுவாயை விவரிக்கும் வகையில் ஓதுவார்கள்.

**கேள்வி** : ஆனால், சொல்லப்பட்ட அந்த மரபுகள் குர்ஆனின் பகுதியாக இல்லையென்று கூறுகிறார்களா?

எழுத்தாளர்கள், வர்ணனையாளர்கள் மற்றும் எடுத்துரைத்தவர்கள் யாவரும் தவறுகளிலிருந்து விதிவிலக்கப்பட்டவர்கள் என்று ஷியா நம்புவது இல்லை. முற்றிலும் தகுதி வாய்ந்த ஹதீஸ்களின் சேகரிப்பில் அவர்கள் இல்லை. நோய் நிவாரணமும் முற்றிலும் தவறுகள் இல்லாத ஒரே புத்தகம் குர்ஆன். மரபுகள் யாவும் குர்ஆனின் வெளிப்பாட்டிற்கு மாறுப்பட்ட நிலையில் விளக்கம் அல்லது பலவீனமானதாக கருதப்படுகிறது.

- ★ சுவாரஸ்யமான தகவல் என்னவெனில் அதிகபடியான மரபுகளை எடுத்து கூறியிருக்கும் ஸஹீ அல் புஹாரி ஸஹீ அல் முஸ்லிம் போன்ற புத்தகங்களில் குர்ஆனின் வசனங்களை தவறியிருக்கிறது என்று குற்றம் சாட்டப்படுகிறது. (அல் புஹாரி அல் ஸஹீ பகுதி 8 பக்கம் 208 முஸ்லீம் அல் ஸஹீ பகுதி 3 பக்கம் 1317.

- ★ இது மாத்திரமல்ல, குர்ஆனின் இரண்டு அத்தியாயங்கள் தவறியிருக்கிறது அதில் ஒன்று அல்-பராஹ் (அத்தியாயம் 9) என்னும் அத்தியாயத்தை போல நீளமுள்ளது என்று குற்றம் சாட்டுகிறார்கள் [முஸ்லீம், அல் ஸஹீ, கிதாப் அல்-ஸகாத், பகுதி 2 பக்கம் 726.]

- ★ இன்னும் சில சுன்னி பாரம்பரியத்தினர் குற்றம் சாட்டுவது என்னவெனில் அல்-அஹ்ஸாப் (அத்தியாயம் 33) என்ற அத்தியாயம் அல் பகராவை (அத்தியாயம் 2 ) போல நீளமுள்ளது. அல்- பகரா அத்தியாயம் குர்ஆனில் அதிக வசனங்களை கொண்ட பெரிய அத்தியாயம். அல் ஸஹீ அல் புஹாரி மற்றும் முஸ்லீம், தவறிய வசனங்களின் விளக்கமளிக்கிறது.

  [அல் புஹாரி அல் ஸஹீ பகுதி 8 பக்கம் 208]

  முற்று பெறாத குர்ஆனை பின்பற்றுகிறார்கள் சுன்னி சகோதர சகோதரிகள் என்று நல்லவேளை ஷியாக்கள் குற்றம் சாட்டவில்லை. ஷியாக்கள் சொல்வதெல்லாம் என்னவென்றால் சுன்னியின் தகவல்கள் ஒன்று பலவீனமானதாகவும் இல்லை ஜோடிக்கப்பட்டதாகவும் இருக்கிறது.

**தீர்வு:**

இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வினால் வெளிப்படுத்தப்பட்ட குர்ஆனிடையே இரு மறைவுகள் (தஃப் டைய்ன்) இட்டு மூடப்பட்டிருக்கிறது என்பது எங்களுடைய நம்பிக்கையாயிருக்கிறது. இது மக்களிடையே பரவலாக காணப்படுகிறது மற்றும் இது அதிக அளவில் விரிந்து இல்லை. இப்போதுள்ள குர்ஆன் அதைவிட அதிக அளவில் விரிந்து காணப்படுகிறது இது பொய் என்று நாங்கள் கூறுவதாக கூறப்படுகிறது.

[அஸ்-ஸதுக், கித்தாபுல் (தெஹ்ரன் **1370 AH** ) பக்கம் **63,** ஆங்கில மொழிப்பெயர்ப்பு, தி ஷியியிட் க்சீட், மொழிப்பெயர்ப்பு. **A.A.A** பைஸ்ஸி (கல்கத்தா **1942)** பக்கம் **85.**

இன்னும் அதிகமான ஆதாரப்பூர்வமான இஸ்லாமை அறிய

**http://al-islam.org/faq)**

## 8. ஷியாக்கள் ஏன் தர்பாஹ் (களிமண்கட்டி) மீது நெற்றியை பதித்து ஸஜ்தா செய்கிறார்கள்?

**<u>அல்லாவின் பெயரால்</u>**

நீர் உமது இறைவனை புகழ்ந்து துதிப்பீராக! ஸஜ்தா செய்வோர்களில் நீரும் ஆகிவிடுவீராக! குர்ஆன் அல் ஹிஜ்ர் **(15:98)**

ஷியாக்கள் ஏன் தர்பாஹ் (களிமண்கட்டி) மீது நெற்றியை பதித்து ஸஜ்தா செய்கிறார்கள்?

ஈராக் என்ற நாட்டிலுள்ள கர்பலா என்னும் இடத்திலிருந்து எடுக்கப்பட்ட களிமண் கட்டிகள் மீது ஸஜ்தா செய்வதையே ஷியாக்கள் விரும்புகிறார்கள்.

இஸ்லாமிய சட்டங்களை பயிற்றுவிக்கும் முக்கிய ஐந்து பள்ளிகளில் ஒன்றாகக் கருதப்படும் ஷியா ஜாஃப்ரி ஃபிக் **(SHIAH JAFARI FIQH)** கல்வியின் படி இறைவனை அடி பணிந்துக் கொள்ளும் இடம் சுத்தமான மண்தரையாக இருக்க வேண்டும்; இல்லையென்றால் அதன் மீது முளைக்கும் புல் பூண்டுகளின் மிது இருக்கலாம். ஆனால் இவைகள் செல்கள் அரித்துவிடக் கூடியதாக இருக்கக் கூடாது. புல், கல், பாறை, மணல், தூசி இவைகள் ஸஜ்தா செய்வதற்கு ஏற்றது. தாதுப்பொருட்களை (MINERALS)ஐத் தவிர, காகிதம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது காரணம் இது பூமியின் மீது விளைந்த ஒரு தாவரத்தினால் செய்யப்பட்டிருக்கிறது.ஆனால் துணி மற்றும் தரைவிரிப்புகள் மீது கூடாது.

அதிகாரப் பூர்வ சுன்னி அறிஞர்கள் அடங்கிய இஸ்லாமிய சட்டம் பயிற்றுவிக்கும் பள்ளிகளும் மண் தரை மீதும் மற்றும் அதன் மீது முலைத்தெழும்பும் தாவரங்களின் மீதும் ஸஜ்தா செய்வதை அங்கீகரிக்கின்றன.

இறைத்தூதரும் (ஸல்) அவருடைய சஹாபாக்களும் எப்பொழுதும் இதை நடைமுறை படுத்தினார்களா?

நிச்சயமாக தரையின் மீது தொழுது கொள்வதென்பது இறைதூதரும் (ஸல்) அவரை சுற்றியிருந்தவர்களாலும் நடைமுறைபடுத்தப்பட்டது.

- ★ அபு ஸயீத்-அல் குத்ரீ கூறுகிறார்: அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஈரமான தரைமீது ஸஜ்தா செய்து இருக்கிறார்கள். அவருடைய நெற்றியில் சேறு படிந்திருந்ததை நான் பார்த்தேன்.

  [அல்-புஹாரி, ஸஹீ (ஆங்கில மொழிப் பெயர்ப்பு) பகுதி **1,** புத்தகம் **22,** எண் **798** மற்றும் பகுதி **3** புத்தகம் **33** எண் **244]**

- ★ அனஸ் பின் மாலிக் கூறுகிறார். நாங்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களோடே மிகவும் சூடான தரைமீது தொழுது இருக்கிறோம். சில நேரங்கள் அந்த சூடான தரையில் முகம் வைக்க முடியாத நிலையில் நாங்கள் துணியை விரித்து அதன் மீது தொழுது இருக்கிறோம்.

  (அல் புஹாரி, ஸஹீ (ஆங்கில் மொழிப் பெயர்ப்பு) பகுதி **2.,** புத்தகம் **22** எண் **299)**

மேற்கண்ட ஹதீஸின் படி தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மட்டுமே இறைத்தூதரும் (ஸல்) அவருடைய ஸஹாபாக்களும் துணியின் மீது ஸஜ்தா செய்தார்கள் என்று தெரிகிறது.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூட குஹுூம்ரா வை (ஈச்ச ஓலையினால் செய்யப்பட்ட பாய்) ஸஜ்தா செய்யும் போது நெற்றிக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

★ மைமூனா கூறுகிறார், அல்லஹ்வின் தூதர் குஹுூம்ரா வை பயன்படுத்தி தொழுது இருக்கிறார்கள்.

★ இறைத்தூதரின் வழிமுறையைக் கூறியிருக்கும் பத்துக்கும் மேற்பட்ட சஹாபாக்களின் ஹதீஸ்களை அறிவிக்கும் பிரபல சுன்னி அறிஞர் அல் ஷாகனி, குறிப்பாக இந்த வழிமுறையை, அதாவது குஹுூம்ரா மீது ஸஜ்தா செய்ததை சுன்னியின் மூலங்களாகிய ஸஹீ முஸ்லீம் ஸஹீ திர்மீதி, சுனன் அபுதாவூது சுனன் -அல் நசாயீ இன்னும் பல புத்தகங்களில் எடுத்து கூறியிருக்கிறார்.

[அல் ஷாகனி நையுல் அல் அவ்தர் -அத்தியாயம் குஹீராமீது ஸஜ்தா பகுதி 2 பக்கம் 128.

★ குஹுூம்ரா என்றால் என்ன?

தொழுகையின் போது ஸஜ்தா செய்வதற்கு கைகளுக்கும் நெற்றிக்கும் போதுமான சிறிய பாய்.

[அல் புஹாரி, ஸஹீ (ஆங்கில மொழிபெயர்ப்பு பகுதி 1 புத்தகம் 8 எண் 376 (இப்படியாக மொழிப் பெயர்ப்பாளர் ஆய்வில் குறிப்பிடுகிறார்)

இப்னு அல் ஆதிர் என்ற இன்னும் ஒரு பிரபல சுன்னி அறிஞர் ஜமி உசுல் இல் எழுதியுள்ளார்.

★ குஹுூம்ரா, தொழுகைக்கு (ஸஜ்தா) எங்களுடைய காலத்தில் ஷியாக்கள் பயன்படுத்தினார்கள்.

[இப்னு அல் ஆதிர் ஜமி அல் உசுல் (கெய்ரோ, 1969) பகுதி 5 பக்கம் 467.

★ கும்ஹுூரா என்பது ஈச்சமரத்தின் ஓலைகளால் செய்யப்பட்ட பாய் மற்றும் இதர இயற்கையான பொருளை ஷியாக்கள் இறைவனை வணங்குவதற்குப் (ஸஜ்தா செய்வதற்கு) பயன்படுத்தினார்கள்.

[தல்கிஹ்ஸ் அல் ஷியா பக்கம் 81]

ஆனால் கர்பலா என்ற பூமி எதற்கு?

கர்பலா (ஈராக்) என்று சொல்லக் கூடிய அந்த மண்ணின் விசேஷத் தன்மையானது, கவனத்தை ஈர்க்கக் கூடிய சிறப்பு வாய்ந்த பொருளாக இறைத்தூதர் (ஸல்) காலத்திலும் அவருக்குப் பின்னும் மதிக்கப்பட்டது. உம்மு சலாமா கூறுகிறார், உசேய்ன் (அலை) அவர்கள் தன் தாத்தாவாகிய இறைத்தூதரின் (ஸல்) மடியில் உட்கார்ந்திருந்தார். அப்போது இறைத்தூதரின் கைய்யில் சிவப்பு மண்கட்டி வைத்திருந்தார். மேலும் அதை முத்தமிடுவதும் அதைப்பார்த்து கண்ணீர் வடிப்பதுமாக இருந்தார். நான் கேட்டேன் இந்த மண் எப்படிப்பட்டது என்று இறைத்தூதர் (ஸல்)

கூறினார்கள். காபிரியேல் எனக்கு அறிந்தது யாதெனில், என்னுடைய மகனாகிய இந்த உசேய்ன் ஈராக் தேசத்திலே கொலை செய்யப்படுவான் என்று கூறினார். அந்த இடத்திலிருந்து அவன் எனக்காக கொண்டுவந்த மண் அவனுடைய அந்த வருங்கால வீழ்ச்சியைக் குறித்து கவலைக் கொண்டவனாய் கண்ணீர் வடிக்கிறேன் என்றார். பிறகு இறைத்தூதர் அவர்கள் அந்த மண்ணை உம் சலாமாவிடம் கொடுத்து சொன்னார்கள்" இந்த மண் ரத்தமாக மாறும்போது உசேய்ன் படுகொலை செய்யப்பட்டார் என்பதை நீ அறிவாய் என்றார்கள். உம் சலாமா அந்த மண்ணை ஒரு பாட்டிலில் அடைத்து அஷூரா என்ற நாள் வரை அதன் மீது கவனத்தைச் செலுத்தினார்கள். 16ம் தேதி முஹ்ரம் 61 ஹிஜ்ரி அந்த மண் ரத்தமாக மாறியது. உம் சலாமா அவர்கள் தெரிந்து கொண்டார்கள் உசேய்ன் உயிரை தியாகம் செய்துவிட்டார் என்று

[அல்-ஹக்கிம் அல் முஸ்தத்ரக் பகுதி 4 பக்கம் 398]

[அல் தஹஹபி ஸியர் அலம் அல் நுபலா பகுதி3 பக்கம் 194]

[இப்னு கதிர், அல் பிதயாஹ் வல்-நிஹயஹ் பகுதி6, பக்கம் 230]

[அல் சுயுட்டி கஹஸ இஸ் அல் குப்ரா பகுதி2, பக்கம் 450 ஜம் அல் ஜவமி பகுதி1 பக்கம் 26]

[இப்னு ஹாஜர் அஸ்கலனி தஹ்திஹ்ப் அல் தஹ்திஹ்ப் பகுதி2 பக்கம் 346]

★ ஸி ஃபின் (SIFFIN)என்ற போருக்குப் பின் அலி பின் அபிதாலிப் கர்பலாவை கடந்து போகையில் அந்த இடத்திருந்து கை நிறைய மண்ணை எடுத்து கூறினார். "ஆஹா.....யாரோ ஒருவர் இங்கு படுகொலை செய்யப்பட போகிறார்.அவர் நீயாயத்தீர்ப்பு எதுவும் இல்லாமல் மறுமையில் சொர்க்கத்தில் நுழைவார்" என்றார்கள்.

[இப்னு ஹாஜர் -அஸ்கலனி தஹ்திஹ்ப் அல் தஹ்திஹ்ப் பகுதி2 பக்கம் 346]

**கர்பலா மீது ஸஜ்தா (POSTRATE) செய்வது ஏன் அவசியமாகிறது.**

பழக்கத்தின் படியல்ல, ஆனால் ஷியாககள் ஸஜ்தாவின் போது அந்த மண்ணை பயன்படுத்துவதற்குக்குக் காரணம் இறைத்தூதர் (ஸல்) அஹ் அல் பைத் என்று சொல்லப்படுகிற அவரது குடும்பத்தின் வழிவந்த இமாம்களும் அந்த மண்ணுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். உசேய்ன் (அலை) அவர்களின் உயிர்த் தியாகத்திற்குப் பிறகு இவரது மகன் இமாம் சைனுல் ஆபிதீன் (அலை) அந்த மண்ணை எடுத்து அது புனித பூமியாக பிரகடணம் செய்தார்கள். மேலும் அந்த மண்ணை தனது பைக்குள் வைத்து அவர் ஸஜ்தா செய்வதற்கும் தஸ்பிஹ் மற்றும் அல்லாஹ்வை புகழ்வதற்கும் அந்த மண்ணை பயன்படுத்தினார்கள்.

[இப்னு ஷஹ்ரஸ்ஹப், அல் மனகிப் பகுதி2 பக்கம் 251]

இதுவும் ஷியாக்கள் அந்த மண்மீது ஸஜ்தா செய்வதற்கு மேலும் ஊக்குவித்தது. கட்டாயத்திக் பேரில் அல்ல.... (அந்த கொலைக்கு) பிரதியுபகாரகமாக செய்யப்படுவதாக அச்செயலை நோக்கினார்கள். இமாம் வலியுறுத்தினார். அல்லாஹவுக்கு முன்பாக ஸஜ்தா செய்யும் தரை

சுத்தமானதாக இருக்க வேண்டுமென்று கர்பலா என்ற மண்ணின் மீது ஸஜ்தா செய்வதால் சுத்தமான தரையின் மீது ஸஜ்தா செய்வதாக ஷியாக்களால் உணரப்படுகிறது.

[அல்-துஸி மிஸ்பாஹ் அல் முத்தஹஜ்ஜித் பக்கம் 511]

[அல் சதக் மன் ல யஹ்துருஹூல் ஃபகிஹ் பகுதி1 பக்கம் 174]

ஷியாக்கள் வெகுகாலம் அந்த மண்ணை தங்களோடே வைத்திருந்தார்கள். அவை அழிந்துவிடுமோ என்று அவர்களுக்குள் ஏற்பட்ட அச்சத்தினால் அந்த மண்ணை பிசைந்து வடிவமைக்கப்பட்ட சிறிய கட்டிகளாக்கி வைத்துக் கொண்டனர். மோஹ்ர் (MOHRI) அல்லது தர்பாஹ் (TURBAH) என்று அதை அழைக்கின்றனர். தொழுகையின் போது அதன் மீது ஸஜ்தா செய்வது கட்டாயம் என்றல்ல ஆனால் அதை சிறப்பியல்பாக நோக்குகின்றனர். சுத்தமான மண் எங்களிடத்தில் இல்லை ஆகையால் இந்த தர்பாஹ் மீது ஸஜ்தா செய்வது உண்மையும் சுத்தமும் இதனிடத்திலிருநு எங்களுக்குக் கிடைக்கிறது.

ஷியாக்கள் கற்களையும், உசேய்னையும் வணங்குகிறார்கள் என்று சிலர் எங்கள் மீது பரிதாபமாகவும் தவறாகவும் கூறி வருகிறார்கள். உண்மை என்னவென்றால் அல்லாஹ்வை ஒருவனுக்கு அந்த தர்பாஹ் மீது ஸஜ்தா செய்கிறோமேயன்றி அந்த கல்லையில்லை. நாங்கள் இறைத்தூதரையோ(ஸல்) இமாம் அலியை (அவை)யோ இமாம் உசேய்னையோ நாங்கள் வணங்குவதில்லை. நாங்கள் அல்லாஹ் ஒருவனையே வணங்குகிறோம். சுத்தமான தரையின் மீது ஸஜ்தா செய்யும்படி இடப்பட்ட அல்லாஹ்வின் கட்டளைக்கு இணங்க.

தீர்வு:

எது இறைத்தூதரின் (ஸல்) சுன்னாவாக அவரால் மதிப்புடன் பரிந்துரைக்கப்பட்ட மிக முக்கிய பொருளாய் இருக்கிறதோ அந்த கர்பலா என்ற இடத்திலிருந்து எடுத்த மண்கட்டிகளை ஸஜ்தா செய்வதற்கு பயன்படுத்த முக்கிய காரணமாக ஷியாக்கள் கொண்டு செல்லுகிறார்கள்.

**மேலும் ஆதாரபூர்வமான இஸ்லாமிய அறிவிற்கு**

**http://al//islam.org/faq**

## 9. ஷியாக்கள், ஏன் Tarawih பிரார்த்தனைகளை தவிர்க்கிறார்கள்? சபைகள் தவிர்க்க ஏன்

<u>அல்லாஹ்வின் பெயரால்</u>

**குர்ஆன்: பனீ இஸ்ராயீல் (17-79) இன்னும் இரவில் ஒரு பகுதியில் உமக்கு உபரியான தஹஜ்ஜுத் தொழுகையை தொழுவீராக! உம்முடைய இறைவன் புகழ்பெற்ற ஸ்லத்தில் உம்மை எழுப்பக்கூடும்**

**இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவர் ஒருவர் ரமலான் மாதத்தில் இரவுத் (கியாம் அல் லைல்) தொழுகையை உண்மையுடன் நிலை நாட்டுகிறாரோ. அவர் அல்லாஹ்விடம் சிறந்த கூலியைப் பெறுவார். மேலும் அவரின் முன் பாவங்கள் மன்னிக்கப்படும். (சஹீ அல் புஹாரி - பகுதி -3 புத்தகம் 37- எண் 226)**

### ஏன் ஷியாக்கள் தராவீஹ்யை ஜமாத்தாக தொழுவதை நிராகரிக்கிறார்கள்?

**புனித மாதமாகிய ரமலானில் தராவீஹ் என்ற தொழுகையை இரவு நேரத்தில் ஜமாத்தாக தொழுவது சுன்னாவாக அஹ் அல் சுன்னாவை (சுன்னி) சேர்ந்தவர்கள் கருதுகிறார்கள். இதை நவஃபில் (பரிந்துரைக்கப்பட்ட தொழுகை தொழ ஷியாக்கள் கட்டளையிடப்பட்டுள்ளார்கள். ஜமாத்தாக தொழும்படியாக இல்லை. இது இறைத்தூதரின் (ஸல்) கட்டளையும் அவரது சுன்னாவாக (நவஃபிலாக தொழுவது) ஷியாக்களினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.**

**அஹ் அல் சுன்னாவைச் சேர்ந்த சகோதர , சகோதரிகள் தராவீஹ் என்ற தொழுகையை ரமலானில் இரவு நேரத் தொழுகையாக நின்று தொழுகிறார்கள். அவர்கள் நின்று குர்ஆனை ஓதுகிறார்கள். அவர்களுடைய நல்ல அந்த செயலுக்காக அல்லாஹ் அவர்களுக்கு நற்கூலி வழங்குவனாக. எப்படியாயினும் இந்த தராவீஹ் என்ற வார்த்தை குர்ஆனில் சொல்லப்படவில்லை மற்றும் இறைத்தூதர் (ஸல்) கூட இப்படிப்பட்ட தொழுகையை ரமலானில் இரவு நேரத் தொழுகையாக ஜமாத்தாக தொழ வேண்டும் என்று எடுத்துச் சொல்லவில்லை. பிறகே, இது முஸ்லீம்களிடையே பரவியது. மொழியின் அடிப்படையில் “தர்வீஹா” என்றா வார்த்தையின் பன்மை தான் “தராவீஹ்” ஆகும். இதன் பொருள் நான்கு ரக்காத் தொழுகையின் இடையில் சிறிது ஓய்வு எடுப்பதாகும். பிறகே ரமலான் மாதத்தில் இரவு நேரத் தொழுகைக்கு இப்பெயர் அழைக்கப்பட்டது.**

### ஜமாத்தாக தொழும் தராவீஹ் தொழுகையின் தோற்றம்.

ரமலானில் ஜமாத்தாக தொழும் தராவீஹ் தொழுகையின் நன்றாக முடிவெடுக்கப்பட்ட உண்மை யாதெனில் இரண்டாம் கலீஃபா உமர் பி அல் கத்தாப்பின் கட்டளையின் படி கடமைக்கப்பட்டு பரவி விளங்கியது.

- ★ அபுஹுரைரா கூறுகிறார். எவர் ஒருவர் உண்மையான விசுவாசத்தோடே ரமலான் முழுவதும் இரவில் தொழுது கொள்கிறாரோ அவருக்கு அல்லாஹ்விடம் சிறந்த கூலியிருக்கிறது. மேலும் அவரின் முன் பாவங்களை அல்லஹ் மன்னிக்கிறான், என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இப்னு ஷிஹப் (துணை ஆறிவிப்பாளர்) கூறுகிறார்.

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) இறப்பிற்கு பின்னும் மக்கள் இதை பின்பற்றியே (நவ்ஃபிலாக தனித்து தொழுதார்கள், ஜமாத்தாக இல்லை) தொழுதார்கள்.

கலீஃபா அபுபக்கரின் காலத்திலும் மற்றும் கலீஃபா உமரின் ஆரம்பக்காலம் வரை இந்நிலை நீடித்தது. அப்துர் ரஹ்மான் பின் அப்துல் காரி கூறுகிறார். ரமலான் மாதத்தின் ஒரு இரவில் உமர் பின் அல் கத்தாபின் தோழர்களோடே நான் ஒரு பள்ளிவாசலுக்கு சென்றேன். அங்கே சில மனிதர்கள்.. தனித்தனியாகவும், சிலர் ஒரு சிறுக் கூட்டம் அமைத்தும் வெவ்வேறு குழுக்களாக தொழுதுக் கொண்டிருப்பதை பார்த்தேன். உமர் கூறினார். “என்னுடைய கருத்து என்னவெனில், இவர்களை ஒன்று சேர்ந்து ஓதுவோரின் (Reciter) தலைமையில் நின்று தொழுவது சிறந்தது, “ என்று கூறினார். (அவர்கள் ஜமாத்தாக தொழட்டும்). அவர் மனதில் எழுந்ததை உபேய் பின் கப் தலமையில் (மக்களை) ஒரே குழுவாக்கினார். இன்னுமொருமுறை உமர் பின் காத்தாப் அவர்களோடே அவரது தோழமைக்குள் சென்றேன் அப்போது மக்கள் தங்களுக்கு முன் ஓதுவோரை (Reciter)ஏற்படுத்தி அவரது தலமையில் தொழுதார்கள். இதை பார்த்த உமர் வியந்து என்ன அருமையான பித்தா(மார்க்கத்தின் புதிய கண்டுபிடிப்பு) இது ஆனால் இந்நேரத்தில் தூங்காமல் மாறாக இத் தொழுகையை தொழுதால் தனியாக தொழுவதைவிட சிறந்ததாகும். அவர் இரவு நேரத் தொழுகையை குறிப்பிட்டார்.

[ஸஹீ அல் புஹாரி, பகுதி 3 புத்தகம் 32 எண் 22]

இது பித்தா என்று அழைக்கப்படும் அதாவது புதுமை ஏனென்றால் இறைத்தூதர் அவர்கள் இந்த தொழுகையை ஜமாத்தாகத் தொழவில்லை. இப்படிப்பட்ட தொழுகையானது முதல் கலீஃபாவாகிய அல் சித்திக் காலத்திலும் இல்லை. இரவு நேரத் தொழுகையில் இந்த எண்ணிக்கையில் தொழுததுமில்லை.

[அல் கஸ்டல்லனி, இர்ஷாத் அல்-ஸரி ஷரஹ் ஸ்ஹீ அல் புஹாரி பகுதி-5 பக்கம்4]

[அல் நவ்வவி, ஷரஹ் ஸஹீ முஸ்லீம் பகுதி 6 பக்கம் 287]

★ ரமலானின் இரவுத் தொழுகையின் தராவீஹ் அமைப்புக்கு முன் உதாரணமாக விளங்கியவர் இரண்டாம் கலீஃபாகிய உமர் ஆவார். அதன் படி மக்கள் ஒன்று கூடி வெவ்வெறு பகுதிகளாக தொழும்படியாக சொல்லிக் கொடுக்கப்பட்டது. இது ரமலானில் ஹிஜ்ரி 14ம் வருடத்திலிருந்து பழக்கத்திற்குட்பட்டது.

★ ஆண்ணும் பெண்ணும் தராவீஹ் தொழுவதற்கு குர்ஆன் மனமாக ஓதுவோரை (உமர்) அமர்த்தினார்.

[இப்னு ஸாத் கிதாப் அல்-தபகத் பகுதி 3, பக்கம் 281]

[அல் சுயுட்டி, தாரிக் அல் குஹூலஃபா பக்கம் 137]

[அல் அய்னி உமர் அல் காரி ஃபி ஷரஹ் ஸஹூ அல் புஹாரி பகுதி6 பக்கம் 125]

## ஜமாத்தாக மசூதியிலா(பள்ளிவாசல்) இல்லை தனித்து வீட்டிலா?

ஜமாத்தை விட்டு வெளியேறி, வீட்டில் தனித்துத் தொழும் தொழுகையாக இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்த இறைத்தூதர் (ஸல்) அவர்களால் பரிந்துரைக்கபபட்டது. இவை குடும்பத்தாருக்கும் இஸ்லாமைப் பற்றிய அறிவினை குழந்தைகள் அடைவதற்கும் ஆசீர்வாதமாக இருக்கும் என்றும் கூறினார்கள்.

★ இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் என் சமுதாயம் கடமையாக்கப்பட்ட தொழுகையை (ஜமாத்தாக) தவிர மற்றவைகளை உங்கள் வீடிலியே தொழுதுக் கொள்வது சிறந்ததாகும்.

★ [ஸஹூ அல் புஹாரி, பகுதி 9 புத்தகம் 92, எண்-393]

★ [அல் நஸாயீ, சுனன், பகுதி3 பக்கம் 161, 198]

★ ஒரு முறை அப்துல்லாஹ் பின் மஸ்வூத் இறைத்தூதரிடம்(ஸல்) கேட்டார்கள். "யா ரசூலுல்லாஹ், வீட்டில் தொழும் தொழுகை மசூதியில் தொழும் தொழுகை இவற்றில் சிறந்தது எது?" என்று இறைத்தூதர்(ஸல்) அவரகள் கூறினார்கள் " பள்ளிவாசல் எனது வீட்டிற்கு எவ்வளவு அருகில் இருக்கிறது என்பதை நீங்கள் அறியவில்லையா? இருந்தும் கடமையான (ஜமாத்தாக) தொழுகையைத் தவிர மற்ற தொழுகைகளை வீட்டிலே தொழுகையைத் தவிர மற்ற தொழுகைகளை வீட்டிலே தொழுவதையே நான் விரும்புகிறேன்." என்றார்கள்.

[இப்னு மாஜா, சுனன், அப்குதி 1 பக்கம் 439 எண்-1378]

★ ஸைய்த் பின் தஹபித் கூறுகிறார்: அல்லாஹ்வின் தூதர் அவர்கள் அவர்களின் வீட்டிற்கு வெளியே ஈச்ச ஓலையினால் அமைக்கப்பட்ட ஒரு சிறிய அறையை தொழுவதற்கு பயன்படுத்தினார்கள் அவ்வாறாக அவர் வீட்டை விட்டு வெளியேறி அந்த அறைக்குள் தொழுவதற்கு சென்றதும் சில மனிதர்களும் அவரோடே சேர்ந்துக் கொண்டார்கள். மறுபடியும் அடுத்த நாள் இரவு இறைத்தூதர் (ஸல்) அவர்கள் தாமதபடுத்தியும் அவர்களோடே வந்து சேராமலும் இருந்தார்கள். ஆகையால் சில மனிதர்கள் தங்களுடைய குரலை உயர்த்தியும்…,சிறிய கற்களைக் கொண்டு கதவை தட்டி ஓசை எழுப்பியும்

அவருடைய கவனத்தை ஈர்க்கும் படியான வேலைகளை செய்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவரக்ள் சற்று கோபத்துடன் அவர்களை நோக்கி, " நீங்கள் உங்கள் செயல்களில் வற்புறுத்துகிறீரகள்." எனக்கு அச்சமாக இருக்கிறது. இந்த தொழுகை உங்களுக்கு கட்டாயமாகி விடுமோ என்று, ஆகையால் முஸ்லீம்களாகிய நீங்கள் இத்தொழுகையை உங்கள் வீடுகளிலேயே தொழுதுக் கொள்ளுங்கள். கடமையான தொழுகையைத் தவிர இதர தொழுகைகளை வீட்டில் தொழுபவரே! சிறந்த தொழுகையாளியாக கருதப்படுகிறார்.

(ஸஹீ அல் புஹாரி பகுதி 8 புத்தகம் 73 எண் 134)

## ஷியா இமாம்கள் தராவீஹ் தொடுவதில்லையா?

இமாம் அல் பகீர் மற்றும் இமாம் அல் சாதில் இவர்களிடம் ரமலான் இரவுத் தொழுகையை ஜமாத்தாக தொழும் சந்தர்ப்பத்திற்கு அனுமதியளிக்கக் கேட்க்கப்பட்டது. அவர்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சொல்லிய வழிமுறையை அவரக்ளுக்கு எடுத்து கூறினார்கள்.

★ நிச்சயமாக (அல்லாஹ்வினால்) பரிந்துரை செய்யப்பட்ட நஃபிலா தொழுகையை ஜமாத்தாகத் தொழுவது புதுமையாகும். மக்களே! நஃபிலா தொழுகையை ஜமாத்தாக தொழுவோம் என்று கூறாதீர்கள். சுன்னாவின் அடிப்படையில் செய்கின்ற சிறிய காரியம் புதுமையென்ற அடிப்படையில் செய்கின்ற பெரிய காரியத்தைவிடச் சிறந்தது என்று சந்தேகமில்லாமல் கூறலாம்.

★ [அல்-ஹூர் அல்-அமிலி வஸாயில் அல்]

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் சந்ததியில் தோன்றிய இமாம்களின் கருத்தை சுஹல்-சுன்னா அறிஞர்களிடையே பிரபலமானவர் எழுதியிருக்கிறார்.

★ இறைத்தூதரின் சந்ததியில் தோன்றிய இமாம் கூறுகிறார் ஜமாத்தாக தொழும் தராவீஹ் தொழுகையானது ஓர் புதுமை.

[அல் ஷாவ்கனி நேயல்-அல்-அவ்தர்-பகுதி 3 பக்கம் 50]

தராவீஹ் தொழுகையை வீட்டில் தொழவேண்டும் என்று ஏன் சுன்னி அறிஞர்கள் கூறிகிறார்கள்?

தகுதியின் அடிப்படையில் அறிஞர்களாக தேர்வு செய்யப்பட்டவர்களுக்குமிடையே, தனிப்பட்ட முறையில் வீட்டிலேயே தொழுவதா! ஜமாத்தாக பள்ளிவாசலில் தொழுவதா என்பதில் கருத்து வேறுப்பட்டது. அல் நவ்வி, ஸஹூ முஸ்லிமின் பிரபல செய்தியாளர், ஜமாத்தாக பள்ளிவாசலில் தொழுவதை கருத்தில் கொண்டிருக்கும் அறிவிப்பாளரின் பட்டியலை பார்த்துவிட்டு பிறகு எழுதுகிறார்.

“மாலிக் , அபு யூசுப் மற்றும் ஷ்ஃபி அறிஞர்கள கூறுகிறார் (இத்)தொழுகையை வீட்டில் தொழுவதே சிறந்தது.

[அல் நவவி ஷரஹ் ஸஹு-முஸ்லீம் பகுதி 6 பக்கம் 286]

## தீர்வு:

ஷியாக்கள், ஒவ்வொரு மாதத்திலும், மற்றும் ரமலானிலும் இரவின் கடைசி பகுதியில் தொழும் தொழுகையாகிய தஹஜ்ஜூத் அல்லது கியாம்-அல்-லைல் அல்லது சலாத் அல் லைல் தொழுகை மீது ஆசைப்படுகிறார்கள். மேலும் ரமலானில் நஃபிலான தொழுகையை தொழுமாறும் கட்டளையிடப்படுகிறார்கள். ஆனால் இவைகள் வீட்டிலேயேதான தவிர ஜமாத்தாக இல்லை. இது குர்ஆன் சுன்னாவின் அடிப்படையிலானது.

மேலும் ஆதாரபூர்வமான இஸ்லாமிய அறிவிற்கு
http://al//islam.org/faq

## 10. ஷியாக்கள் ஜெபங்களை ஏன் இணைக்கிறார்கள்?

<u>அல்லாஹ்வின் பெயரால்</u>

குர்ஆன் (பனீ இஸ்ராயீல்) 17:78 சூரியன் சாய்ந்ததிலிருந்து இரவின் இருள் வரை தொழுகையை நிலைநிறுத்தும்!

அதிகாலையில் (குர்ஆன்) ஓதுவதை கடைப்பிடியும் அதிகாலையில் ஓதுவது சாட்சி சொல்லப்படக் கூடியதாகும்.

### ஏன் ஷியாக்கள் தொழுகைகளை இணைத்து தொழுகிறார்கள்?

கடமையான ஐந்து தொழுகைகளை ஷியாக்கள் ஒப்புக்கொள்கிறார்கள். வரையறுக்கப்பட்ட நேரத்தின் படி லுஹர் (zuhr) தொழுகையை துவக்கி அஸர் தொழுகையை அதனோடே சேர்த்தே, இணைக்கப்பட்ட தொழுகையாக லுஹர், அஸர் தொழுகையை அடுத்தடுத்து தொடர்ந்து ஷியாக்கள் தொழுதுவருகிறார்கள். அந்த ஒழுங்கின் படியே மக்ரிப், இஷா தொழுகைகளையும் இணைத்தே தொழுவது அனுமதிக்கப்பட்டதாகவும் கருதுகிறார்கள். இந்த செயல் குர்ஆனின் முழு உடன்படிக்கை மட்டுமின்றி இறைத்தூதரின் (ஸல்) வழிமுறையாகவும் இருந்துள்ளது.

ஹனஃபி பள்ளியைத் தவிர்த்து, சுன்னியின் சட்டப்பள்ளிகளில் மழை, பயணம், மற்றும் நெருக்கடியான சமயங்களில் கடமையானத் தொழுகைகளை (அல் ஜம் பைன் அல் சலாத்தைன்) இணைத்து தொழ அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஹனஃபியின் சட்ட பள்ளிகளில், ஹஜ்ஜின் காலங்களில் தொழப்படும் அல்-முஸ்தலிஃபா என்ற தொழுகைளைத் தவிர்த்து கடமையான மற்றத் தொழுகைகளை இணைத்து தொழுவதற்கு தடைசெய்தது. மாலிக்கி, ஷாஃபி மற்றும் ஹன்பாலி சட்டப் பள்ளிகளில் (School of Law) இந்த இணைத்து தொழுகிற தொழுகைக்கு ஒப்புதல் அளித்திருக்கிறார்கள் அதாவது பயணத்தின் போது மட்டுமே! ஆனாலும் வேறு சில காரணங்களால் இதற்கு வெவ்வேறான கருத்துகளும் வைத்திருக்கிறார்கள். ஷியாவின் ஜாஃபரி பள்ளி கூறுகிறது குறிப்பிட்ட காரணங்கள் இன்றியும் ஒருவர் தொழுகையை இணைத்து தொழ முடியும் என்று.

குர்ஆனின் அடிப்படையில் தொழுகையின் நேரங்கள். இமாம் ஃபக்ஹர் அல் தின் அல் ரஸி, இந்த பிரபலம் வாய்ந்த குர்ஆன் விரிவுரையாளர் அத்தியாயம் 17, ஆயத்து 78ன் படி குறிப்பிடுகிறார்.

★ இருளைப் பற்றி நாம் விளக்குவதென்றால், இருள் சூழும் அந்நேரம். அதாவது இருளின் முதல் தோற்ற நிலையைக் குறிப்பிடுவதென்றால் அது மக்ரிப் ஆகும். இதன் அடிப்படையில் தொழுகைக்கான மூன்று கால நிலைகளை குர்ஆன் கூறுகிறது. நன்பகல் நேரமும் மக்ரிபின் துவக்கநிலையும் மற்றும் அதிகாலை தொழுகையாகிய ஃபஜர்(Fajr) இந்நேரங்கள். நன்பகலின் நேரம் தொடர்கிற லுஹர்(Zuhr) மற்றும் அஸர் (asr) இவற்றில் இவ்விரண்டும் தொழுகையும் தொழுகின்ற நிலையும் மக்ரிபின் துவக்க நிலையிலும் அதை தொடர்ந்து இஷாவுக்கும் உண்டான இடைப்பட்ட நேரங்களில் மக்ரிப், இஷா இவைகள் இரண்டும் தொழுகின்ற நிலையும் இருப்பதால் இதனை உள்ளடக்கி இணைப்பு தொழுகையாக லுஹர் மற்றும் அஸரும், அடுத்து மக்ரிப் மற்றும் இஷா தொழுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. தவிர்க்க முடியாத காரணங்கள் இல்லையென்றால் இந்த இணைப்புத் தொழுகைகளை வீட்டில் தொழுவதற்கு அனுமதியில்லை என்ற சாட்சியிருக்கிறது. மழை மற்றும் பயணங்களில் இந்த இணைத்து தொழும் தொழுகைகளுக்கு அனுமதியுண்டு

[ ஃபக்ஹர் அல் தின் அல் -ரஸி-அல் தஃப்ஸிர் அல் கபீர் - பகுதி -5 பக்கம் -428]

தவிர்க்கமுடியாத நிலை இருந்தால் தவிர இணைத்து தொழும் தொழுகை முழுவதும் தகுதியுள்ளது என்பதை மறுக்க முடியாத ஆதாரத்தோடே நாம் சொல்ல முடியும். எனினும், கடமையான தொழுகைகள் மூன்று என்று குர்ஆன் தெளிவாகக் கூறுகிறது.

1. கடமையான தொழுகைகளாகிய லுஹர்(Zuhr) மற்றும் அஸர் (Asr) இவைகளின் நேரங்கள் பகிர்ந்து இரண்டு தொழுகையும் ஒரே சமயத்தில் இரண்டுக்கும் சில நிமிட இடைவெளியில் தொழப்படுகிறது.
2. அதேபோல கடமையான தொழுகைகளாகிய மக்ரிப் (Magrib) மற்றும் இஷா(Isha)வின் நேரங்கள் பகிர்ந்து மக்ரிப், இஷாவாக ஒரே சமயத்தில் இரண்டிற்கும் சில நிமிட இடைவெளியில் தொழப்படுகிறது.
3. ஃபஜரின் நேரத்தில் குறிப்பாக காலை ஃபஜர் தொழப்படுகிறது.

**இறைத்தூதர் (ஸல்) தொழுகைகளை இணைத்து தொழுதாரா?**

★ இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கிறார்கள், அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் மதினாவில் ஏழு மற்றும் எட்டு ரக்காத்துகள் இணைத்து தொழுது இருக்கிறார்கள். லுஹர் மற்றும் அஸர் தொழுகையாக எட்டுரக்காத்துகளும் மக்ரிப் தொழுகையை இரவுத் தொழுகையாகிய இஷாவுடன் சேர்த்து ஏழு ரக்காத்துகள் தொழுது இருக்கிறார்கள்.

[ ஸஹீ அல் புஹாரி (ஆங்கில மொழிப்பெயர்ப்பு) பகுதி -1 புத்தகம் 10 எண் 537, ஸஹீ அல் முஸ்லீம் (ஆங்கில மொழிப்பெயர்ப்பு) கிதாப் அல் சலாத் புத்தகம் 4 அத்தியாயம் 100 ஒருவர் வீட்டில் இருக்கும்போது இணைப்புத் தொழுகை ஹதீஸ் எண் 1522]

★ அப்துல்லாஹ் பி.ஷகிக் கூறுகிறார்கள் மத்திய வேளைக்கு அடுத்து சூரியன் மறைந்து நட்சத்திரங்கள் தென்படும் நேரத்தில் இப்னு அப்பாஸ் அவர்கள் வந்தார்கள். அப்பொழுது மக்கள் தொழுகை, தொழுகை என்று சொன்னார்கள். தமிம் குலத்தைச் சேர்ந்த ஒருவர் வந்தார்.... அவரும் அதேபோலவே தொழுகை தொழுகையென்று கத்தினார்... கூக்குரல் முன்பை விட குறைந்த நிலையுமில்லை... அதிகமாகவுமில்லை. இப்னு அப்பாஸ் அவர்கள் கூறினார்கள்...நீங்கள் உங்கள் தாயை இழந்து இருக்கலாம், நீங்கள் எனக்கு சுன்னாவை கற்றுக் கொடுக்கிறீர்களா? நான் பார்த்திருக்கிறேன். அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் நன்பகல் தொழுகையாகிய லுஹரையும் பகலின் பின்பகுதி தொழுகையாகிய அஸரையும் இணைத்துத் தொழுது இருக்கிறார். அதேபோல் அந்தி சாயும் நேரமாகிய மக்ரிப் தொழுகையையும் இரவுத் தொழுகையாகிய இஷாவையும் இணைத்தே தொழுது இருக்கிறார்கள், என்று அப்துல்லாஹ் பி ஷகிக் கூறினார்கள்....எனக்கு இதில் சிறிது சந்தேகம் இருந்தது ஆகையால் நான் அபுஹுரைரா விசாரித்தேன். அதற்கு அவர் நான் சொன்ன காரியத்திற்கு சாட்சியம் அளித்தார்.

[ஸஹீ அல் முஸ்லீம் (ஆங்கில மொழிப்பெயர்ப்பு, கிதாப் அல் சலாத் புத்தகம்-4-அத்தியாயம்-100(COMBINATION OF PRAYERS WHEN ONE IS RESIDENT ஹதீஸ்-1523, 1524]

**ஆனால் அத்தொழுகை, பயணம், பயம் மற்றும் மழைக் காரணமில்லையா?**

இதுபோன்ற எந்த காரணாமும் இல்லாமல், இறைத்தூதர்(ஸல்) அவர்கள் தொழுகையை இணைத்துத் தொழுதிருக்கிறார்கள் என்று அவரது வழிமுறைகள் நமக்கு குறிப்பிட்டுக்காட்டுகிறது.

★ இறைத்தூதர் அவர்கள் மதினாவில் வசித்தப்போது அவர் பயணம் ஏதும் மேற்கொள்ளாத நிலையில் ஏழு ரக்காத் மற்றும் எட்டு ரக்காத் தொழுகைகளை தொழுது இருக்கிறார்கள். இவைகள் லுஹர் மற்றும் அஸர் தொழுகையை எட்டு ரக்காத்தாகவும், மக்ரிப் மற்றும் இஷாத் தொழுகையை ஏழு ரக்காத்தாவும் தொழுது இருக்கிறார்கள் என்பதை குறிப்பிட்டு காட்டுகிறது.
(அஹமத் பின் ஹன்பல் அல் முஸ்நத் - பகுதி-1 பக்கம் 221)

★ இறைத்தூதர்(ஸல்) அவர்கள் பயத்தின் காரணமாக அல்லது பயணத்தின் காரணமாக இல்லாமல்....சாதாரண நிலையிலேயே ஓஹர் மற்றும் அஸர், மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை இணைத்து தொழுது இருக்கிறார்கள். [மாலிக் பின் அனஸ் அல் முவத்தா பகுதி-1 பக்கம் 161]

உண்மையாக இன்னும் நாம் சொன்னது, பகுத்தறிவையும் முற்படுத்தி தன் வழிமுறையை தன்னுடைய சமுதாயத்தினருடைய வசதிக்கேற்ப இறைத்தூதர் (ஸல்) அவர்கள் செய்திருக்கிறார்கள்.

★ இப்னு அப்பாஸ் கூறுகிறார், " இறைத்தூதர் அவர்கள், பகல் மற்றும் பிற்பகல் மேலும் சூரியன் மறைந்த உடன் மற்றும் இஷா தொழுகைகளை எந்தவிதமான அபாயமோ, மழையோ இல்லாத நேரங்களில் இணைத்து தொழுது இருக்கிறார்கள். வஹியின் மூலமாக பரவிய செய்தி என்னவென்றால், நான் இப்னு அப்பஸிடம் கூறினேன். என்ன செய்யும்படி அவரை தூண்டியது, அவர் சொன்னார். ஆகையால் கடினமானதொன்றும் அவருடைய (இறைத்தூதர் (ஸல்)) சமுதாயத்தினர் மீது சுமத்த வேண்டாம், என்று,
[ஸஹீ முஸ்லீம் (ஆங்கில மொழிப்பெயர்ப்பு) கிதாப் அல் சலாத், புத்தகம்-4 அத்தியாயம் 100. " COMBINATION OF PRAYERS WHEN ONE IS RESIDENT, ஹதீஸ் எண் -1520, சுனன் அல் திர்மிதி பகுதி-1 பக்கம் 26]

★ அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் பகல் தொழுகையையும், பிற்பகல் தொழுகையையும், பயத்தின் காரணமாகவோ அல்லது பயணத்தின் காரணமாகவோ இல்லை இவ்விரண்டையும் இணைத்து தொழுது இருக்கிறார்கள். அபு சுபைர் கூறுகிறார். நான் சைய்திடம் கேட்டேன் (எழுத்தாளர்களில் ஒருவர்) ஏன் அவர் இப்படி செய்கிறார் என்று, அவர்

சொன்னார், நீங்கள் என்னித்தில் கேட்டது போலவே நான் இப்னு அப்ஸிடம் கேட்டேன், அவர் கூறினார். அவர் (பரிசுத்தமுள்ள இறைத்தூதர்) அவருடைய உம்மத்தினரிடையே (சமுதாயம்) ஒருவரும் அவசியமற்ற சுமைகளை சுமக்க கூடாது என்பதையே அவர் விரும்புகிறார்.

[ஸஹீ முஸ்லீம் ஆங்கில மொழிப்பெயர்ப்பு, கிதாப் அல் ஸலாத், புத்தகம் 4 அத்தியாயம் 100 " COMBINATION OF PRAYERS WHEN ONE IS RESIDENT" ஹதீஸ் எண் 1516]

## அனுமதித்தே இருந்தாலும் ஏன் இதை செய்ய வேண்டும்?

தனித்து தொழுவதில் ஏதாவது தவறு இருப்பதாக ஒருவரும் காரணம் கூறவில்லை, லுஹர் மற்றும் அஸர், இன்னும் மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜமாத்தாகவும், அல்லது தனித்தும் தொழலாம். எப்படியாயினும் இத்தொழுகைகளை இறைத்தூதர்(ஸல்) இணைத்து தொழுதது அல்லாஹ்வின் தூதரை பின்பற்றும் உம்மத்தினருக்கு வசதியாகவே அல்லஹ்வின் மாபெரும் கருணையாகவும், ஏன் ஷியாக்களிடையே இத்தொழுகை பழக்கப்படுத்திக் கொள்ளப்பட்டது என்பதற்கு நல்ல காரணமாகவும் இருக்கிறது.

- ★ பெரும்பாலும் மக்கள் தங்களின் வேலையின் காரணமாகவும், மேலும் தனிப்பட்ட தேவைகளின் காரணமாகவும் தொடர்ந்து அவசரத்துடனே காணப்படுகிறான். மேலும் சில நாடுகளில் படிப்பு மற்றும் அவர்களின் வேலை நேரங்கள், முஸ்லிம்கள் தங்கள் விருப்பத்தின் படி தினமும் தொழுதுகொள்ளும் அளவிற்கு அமைவதில்லை. சில அலுவலகங்களில் தொடர்ந்து அதிக நேரம் உழைக்க வேண்டியுள்ளது.மற்றும் தொடர்ச்சியான வேலைகள், எனவே இதுபோன்ற சூழ்நிலையில் வசதிக்கேற்றப்படி இரண்டு தொழுகைகளில் ஒன்று விட்டுவிடாதபடிக்கு சீக்கிரமாகவும் அதேசமயத்தில் தாமதமாகவும் இல்லாமல் குறித்த நேரத்தில் ஷியாக்கள் தொழுகைகளை பேணி வருகிறார்கள்
- ★ மக்கள் தொலைவில் இருந்து வந்து அவர்கள் இரண்டு தொழுகையில் ஒன்றைமட்டும் தொழும் போது அதை தொடரும் வேறொரு ஜாமத்தில் (விடுபட்ட) அந்த தொழுகையை தொழுதுக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அவர்கள் கடமையான தொழுகைகளை ஜமாத்தோடே தொழுது கொள்ளவும் அதனால் அல்லாஹ்விடம் நற்கூலியைப் பெறுவதற்கும்(ஜூம்மா) தொழுகையை உதாரணத்திற்கு

கருத்தில் கொண்டால் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சுன்னி தொழுகையாளிகள் ஜூம்மாவில் கலந்து கொண்டு அஸரின் ஜமாத்தை விட்டு விடுகிறார்கள். மறுபக்கம் பார்க்கையில் ஷியாக்கள் வெள்ளிகிழமை ஜூம்மா தொழுகையேடே அஸர் தொழுகையையும் ஜமாத்தோடே முடிக்கிறார்கள்.

★ உண்மையான இந்த சுன்னாவை சுன்னி சகோதரர்கள் தங்களிடையே பொருத்தி கொள்ளாததற்கு காரணம் ஷியாக்கள் ஏன் இந்த சுன்னாவிற்கு உயிர் கொடுத்து வைத்திருக்கிறார்கள் என்பதே, நாங்கள் குழந்தைகளுக்கும் மற்றும் பிற முஸ்லீம்களுக்கும் விரும்புவது என்னவென்றால், லுஹர் அஸர் மற்றும் மக்ரிப், இஷா தொழுகைகளை இணைத்து தொழுவது இறைத்தூதரின் (ஸல்) சுன்னாவாகும் ஆக இதை கவனமாக செயல்படுத்த வேண்டும்.

**தீர்வு:**

லுஹர், அஸர் மற்றும் மக்ரிப் இஷா தொழுகைகளை இணைத்து தொழுவது குர்ஆனின் படியும் மற்றும் இறைத்தூதரின்(ஸல்) சுன்னாவின் படியாகும். இது அதிகபடியான சலுகை தகுந்த ஆதாரமான சுன்னாவை பொதுவாக பின்பற்றாமாலும் தங்களுடைய வாழ்க்கைக்கு அதை எடுத்து செல்லாமலும் சுன்னி சகோதரர்கள் இருக்கிறார்கள். பிரபல சுன்னி அறிவிப்பாளர் ஸஹூ முஸ்லிம், அல் நவமியில் எழுதுகிறார்.

சுன்னாவை பின்பற்றுவது கண்டிப்பாக அதிகாரத்திற்குட்ப்பட்டது. அவைகள் தள்ளிவிடப்படவில்லை. ஆனால் இதை பெரும்பாலானோர் கைவிடுகிறார்கள்.

[அல் நவமி ஷரஹ் ஸஹீ முஸ்லீம் பெய்ரூட், 1392. A.H) பகுதி 8 பக்கம் 56]

மேலும் ஆதாரபூர்வமான தகவல்களுக்கு

http://al//islam.org/faq

## 11. புள்ளிகள் இல்லாமல் ஒரு சொற்பொழிவு

<u>அல்லாஹ்வின் பெயரால்</u>

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் “ நான் ஞானத்தின் வீடு இன்னும் அலி (அலை) அதற்கு கதவு”

(ஸஹீ அல்- திர்மிதி, (கெய்ரோ பதிப்பு) கிதாப் அல் மனாகிப், பகுதி 5, பக்கம் 637 ஹதீஸ் எண் 3723)

### புள்ளிகள் இல்லாத பிரசங்கம்

ஞானம், அறிவு மற்றும் சொல்லாற்றல் மிகுந்த அலி பி.அபிதாலிப் அவர்கள், இஸ்லாமிய சிந்தனைக்குரிய பள்ளியின் முஸ்லிம்களுக்கிடையே நன்கு அறியப்பட்டவர். அவருடைய அரபி மொழியின் ஆற்றலுக்கு ஒரு உதாரணம் முன்கூட்டியே தயார் செய்யாமல் அந்நேரத்தில் அவர் பேசிய பிரசங்கம் அவரின் திறமையை வெளிப்படுத்தியது. அதை அப்படியே எழுதும் போது அவ்வார்த்தைகள் மற்றும் எழுத்துகள் புள்ளிகள் எதுவுமின்றி அமைந்திருந்தது.

எல்லா புகழும் அல்லாஹ்வுக்கே! புகழப்படும் அரசன் பாசம் மிகுந்த எஜமான், பிறப்புகளுக்கெல்லாம் வடிவமைப்பாளர்; ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவி புரியபவன். பூமியை அளக்கிறவன்; உறுதியான மலைகளை நிலைநிறுத்துகிறவன், மழையை பொழிய்யச் செய்பவன், கஷ்டங்களை நீக்குகிறவன், மறைவானவற்றை அறிகிறவன் அவற்றை வெளிப்படுத்துகிறவன், ராஜ்யங்களை நிர்மூலமாக்குகிறவன். ஆஸ்திகளை ஒன்றுமில்லாமல் ஆக்க செய்பவன் காலங்களை மாற்றி அதை மறுபடியும் செயலாக்குகிறவன். ஒவ்வொரு இலக்குக்கும் மூல காரணமானவன், பாராபட்சமின்றி பரவலாக மேகங்களின் அடுக்குகளிலிருந்து மழையை பொழிய வைக்கிறது. அவனுடைய பெருந்தன்மையே! அவனை நோக்கிக் கூப்பிடும் நம்பிக்கையாளர்களுக்கு பதிலளிக்கவும் அவர்களுக்கு அளவில்லாமலும் தன்னுடைய கரங்களை அகல விரிக்கிறான்.

என்னுடைய துதிகளுக்கு முடிவில்லை. அவனிடத்தில் திரும்புகிறவர்களை அவன் எண்ணும் விதமாய் அவனை நான் கருத்தில் கொள்கிறேன். அவன்தான் அல்லாஹ். இந்த உலகிற்கு அவனை தவிர கடவுள் இல்லை. அவனால் உருவாக்கப்பட்டதை எவரால் சிதைக்கமுடியும். இஸ்லாமை நிலையாகத் தாங்கிக் கொள்கிறவராய் முஹம்மதை(ஸல்) அவனே அனுப்பினான். ஆட்சி செய்யும் தலைவர்களையும், எதிப்பாளர்களின் ஒடுக்கு முறைகளை தடுத்திடும்

காப்பாளர்களையும் அவனே ஏற்படுத்தினான். உத், ஸவா என்று அழைக்கபடும் தங்களால் நடக்கவும் சக்திப் பெறாத விக்கிரகங்களின் அதிகாரத்தை தடுக்கும் வீரர்களை ஏற்படுத்தினான். அவன் அவருக்கு (முஹம்மது) அறிவித்தான், கற்றுக் கொடுத்தான், ஏற்படுத்தினான் மற்றும் அவரை முழுமையாக்கினான். அவர் அவனின் (இறைவன்) அடிப்படைகளை நிறுவினார் அவைகளை தளர்த்தவும் செய்கிறார். வாக்கு செய்யப்பட்ட அந்த இறுதிநாளைக் குறித்து முன் எச்சரிக்கை செய்கிற வராய்((முஹம்மதை) அல்லாஹ் மதிப்பு மிக்க ஸ்தானத்திலும் அவரின் ஆன்மா சமாதானமடையும் பொருத்திக் கொண்டான் "அவருடைய சந்ததிகளை அவனை வணங்குதற்குரியவர்களாக அல்லாஹ் கருணைக்காட்டுவானாக! நீண்ட காலமாக நட்சத்திரங்கள் பிரகாசிக்கிறது, சந்திரன் தொடர்ந்து உதயமாகிறது. அல்லாஹ்வை தவிர இறைவன் இல்லை என்பதும் தொடர்ந்து சுற்றிலும் கேட்கபடுகிறது".

அல்லாஹ் உங்களது சிறந்த அமல்களை பாதுகாக்கட்டும் நீதியின்படி உங்களின் வழிகளை தேடுங்கள், மற்றும் தடைசெய்தவற்றை விட்டுவிடுங்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை கவனித்து, விழிப்புணர்வோடும் இருங்கள். உறவுகளை இணைத்து வளர்த்துக் கொள்ளுங்கள். ஆசைகளுக்கு கட்டுபடாமல் தடுத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய அத்தாட்சியான உறவுகளை நீதியுடன் தயாளமாக பேணிக் கொள்ளுங்கள். பேராசைக்காரர்களுடனும், வீண்பேச்சாளார்களுடனும் உறவைத் துண்டித்துக் கொள்ளுங்கள்.

உன்னுடைய மணவாளன் சுபாவமாக பிறக்கும் போதே பாவம் செய்யக் கூடியவர்கள்தான். ஆனால் மிகுந்த கௌரவமானவராகவும், இனிமையான வம்சாவளியானராவார். அவர் உன்னிடத்தில் வருகையில் உன் அனுமதியோடே, கருணையுள்ள மணமகளாய் உன்னை திருமணம் செய்யும் போது அவர் மஹர் கொடுக்க வேண்டும். உம்மா ஸலாமாவுக்கு அல்லாஹ்வின் தூதர் கொடுத்ததைப் போல நிச்சயமாக அவர் கருணையுள்ளங் கொண்ட மணமகனாவார். அவருடைய(இறைத்தூதர்) சந்ததியின் மேல் அன்பு செலுத்துங்கள். அவர் யாரை விரும்பினரோ! அவரை திருமணம் செய்தார். அவர் மனைவியின் விருப்பத்தில் குழப்பமோ! இல்லை அதிகாரம் செலுத்துபவராகவோ இருக்கவில்லை.

உங்களுக்காக அல்லாஹ்விடம் வேண்டிக் கொள்கிறேன். அவனுடைய இரக்கமும் அல்லது தொடர்போ துண்டித்து விடாதபடிக்கு அவனுடைய சமாதானம் உங்களில் தொடரவும் அவன் உங்களை மனதார பொருத்திக் கொண்டு அவனுடைய நிலைபாட்டின் படி உங்களை சீர்த்திருத்தம் செய்து

ஒவ்வொருவருக்கும் உண்டான தனிப்பட்ட விதியின்படி இனி உங்களை காப்பனாக! அவனுக்கு எப்போதும் நன்றி சொல்லவும் அவனுடைய தூதர் அஹம்மதை (ஸல்) புகழவும் செய்வீர்களாக!

இந்த பிரசங்கம், இமாம் அலியினால் ஒரு திருமண நிகழ்ச்சியில் உறையாற்றப்பட்டது. அவரது நெருங்கிய திருமணமாக இருக்கலாம். இவைகள் நிறைய அறிஞர்களால் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

- ★ முஹம்மது ரித்தா அல்-ஹக்கிமி ஸலுனி கப்ல் அன் த.்ப்கிதுனி பகுதி -2, பக்கம் 442.3
- ★ சைய்யித் அல்-முஸவய் அல்-ஸட்டரஹ் மின் பிஹர் மனகிப் அல் நபி வ் அல் தரா பகுதி 2 பக்கம் 179.
- ★ ஹசன் அல்-துல.்பி .்பத இல் ஆல் அல் ரசூல், பக்கம் 6

## الخطبة العارية عن النقطة للإمام علي (عليه السلام)

الحمد لله الملك المحمود والمالك الودود مصور كل مولود مآل كل مطرود ساطح
المهاد وموطد الأوطاد ومرسل الأمطار ومسهل الأوطار عالم الأسرار ومدركها
ومدمر الأملاك ومهلكها ومكور الدهور ومكررها ومورد الأمور ومصدرها عم
سماحه وكمل ركامه وهمل وطاوع السؤال والأمل أوسع الرمل وأرمل أحمده
حمدا ممدودا وأوحده كما وحد الأواه و هو الله لا إله للأمم سواه ولا صادع
لما عد له وسواه أرسل محمدا علما للاسلام وإماما للحكام ومسددا للرعاء
ومعطل أحكام ود وسواع أعلم وعلم وحكم وأحكم أصل الأصول ومهد وأكد
الموعود وأوعد أوصل الله له الأكرام وأودع روحه السلام ورحم آله وأهله الكرام
ما لمع رائل وملع دال وطلع هلال وسمع اهلال.

اعملوا رعاكم الله اصلح الأعمال واسلكوا مسالك الحلال واطرحوا الحرام ودعوه
واسمعوا أمر الله وعوه وصلوا الأرحام وراعوها وعاصوا الأهواء واردعوها وصاهروا
أهل الصلاح والورع وصارموا رهط اللهو والطمع ومصاهركم أطهر الأحرار مولدا
وأسراهم سؤددا وأحلاهم موردا وها هو أمكم وحل حرمكم مملكا عروسكم
المكرمه وماهر لها كما مهر رسول الله أم سلمه وهو أكرم صهر أودع الأولاد
وملك ما أراد وماسها مملكه ولا وهم ولا وكس ملاحمه ولا وصم اسأل الله لكم
احماد وصاله ودوام اسعاده وألهم كلا اصلاح حاله والاعداد لمآله ومعاده وله
الحمد السرمد والمدح لرسوله أحمد (ص).

### இந்த பிரசங்கத்தின் சிறப்பு என்ன?

எவர் அரபு மொழியை தெரிந்து வைத்துள்ளாரோ! அல்லது குர்ஆனை ஓதும் அளவிற்கு தெரிந்து வைத்துள்ளாரோ, அரபிக் அரிச்சுவடியில் குறிப்பிட்ட சில எழுத்துகள் புள்ளிகளோடே வருவதை காண்பர். அவைகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகள் பேசும் போதும் எழுதும் போதும் கையாளப்படுகிறது.

ش ب ت ن ض ث ق ف غ خ ج ز ظ ذ ي

இதுபோன்ற எழுத்துகளை பயண்படுத்தாமல் அர்த்தமுள்ள ஒரு விஷயத்தை கொடுப்பது கடினம். இந்த பிரசங்கத்தில் முன் கூட்டியே தயார் செய்யாமல் இமாம் அலி அவர்கள் புள்ளிகள் இல்லாமல் - பேசிய பிரசங்கங்கள் நமக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.

[குறிப்பு : இந்த எழுத்துகள் தாமர்புட்டா வை சேர்ந்தது ஆரம்பக்கால அரபி அச்சுகள் புள்ளிகள் இல்லாமல் இருந்தது.

## வேறு எதாவது பிரசங்கம் இருக்கிறதா?

இமாம் அலி அவர்கள் அலிஃப் இல்லாமலேயே வேறொரு பிரசங்கம் செய்து இருக்கிறார்.

இந்த அலிஃப் என்ற அரபிக் அரிச்சுவடியின் எழுது சந்தேகத்திற்கிடமின்றி பொதுவாக மொழிக்கு பயண்படுத்தக்கூடிய ஒன்றாகும். புள்ளிகள் இல்லாமல் சில அர்த்தமுள்ள வரிகளைக் கூட எழுதுவது கடிணம். பிறகு எப்படி இப்படிப்பட்ட பிரசங்கத்தை அவரால் கொடுக்க முடிந்தது. இது முற்றிலும் ஞானத்தின் அடிப்படையே. இது போன்று பல முறை அவர் பேசியிருக்கிறார், நீங்கள் பார்த்தீர்களென்றால்! அலிஃபை பயன்படுத்தாமல் பேசியிருக்கிறார்.

இந்த பிரசங்கள் பொதுவாக கூறப்படுகிறது! அல் குத்பா அல் முனிகாஹ் மற்றும் முஸ்லீம் அறிஞர்களால் இது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சுன்னி அறிஞர்களிடையே இதை குறித்து எழுதியவர்கள்.

- ★ முஹம்மது பி. முஸ்லீம் அல் ஷஃபி கிஃபயத் அல் தாலிப் பக்கம் 248.
- ★ இப்னு அபி அல் ஹதித் அல் -முதஸிலி ஷரஹ் நஹ்ஜ் அல் பாலாக்ஹஷ் பகுதி-9 பக்கம் 140.

இமாம் அலியால் அத்தகைய சாதனையை எப்படி நிறைவேற்ற முடிந்தது?

இமாம் அலி அவர்கள் இத்தகைய அறிவும், சொல்லாற்றலும் வெளிப்படுத்தப்பட்டது, அவரது ஒழுக்கத்தின் நிமித்தமே! அவர் இறைத்தூதருடன் (ஸல்) இணைந்து இருந்ததால் இறைத்தூதரின் (ஸல்)ஆன்மீக பற்று, ஞானம் போதனையே இமாம் அலிக்கு இத்தகைய அறிவு கிடைக்கப் பெற்றது.

மேலும் ஆதாரமான இஸ்லாமிய அறிவுக்கும் இறைத்தூதரின் போதனைகள் விவரித்த இமாம் அலியை பற்றி அறிவதற்கு

**http://al-islam.org/fag/**